பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 17 சனிக்கிழமை 31.12.2022 கதிர் 56

### இது ரகசியம் அல்ல!

நடக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது, நடந்திருக்கின்றது. அவ் வளவுதான். யாழ் மேயர் மணி வண்ணன் திரிசங்கு நிலையில் சிக்கி உள்ளார் என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந் தேன். அதிலிருந்து மீள்வதற்கு அவருக்கு இருந்த ☞2

# இனவாத சிந்தனைப் போக்குடைய விஜயதாஸ தமிழர் ஒற்றுமை பற்றிப் பேச அருகதையற்றவர்



## கிளிநொச்சிக் கூட்டத்தில் சிறிதரன் எம்.பி. காட்டம்

அடிப்படையில் இனவாத சிந்தனைகளையும் எண்ணாங்களையும் கொண்டுள்ள இலங்கையின் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தமிழர்கள் தங்களுக்குள் ஒற்றுமைப்பட வேண்டும் என்று சொல்லுவ தற்கு எந்தவித அருகதையுமற்றவர் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகர வட்டாரத்துக்கான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டாரக் கிளையின் புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் கலந்து ரையாடல் நேற்றுப் பிற்பகல் இலங்கைத் தமிழரசுக் ☞2



# யாழ் நகர மேயர் மணி நேற்று இராஜினாமா!

## இன்றுடன் பதவி விலகுகின்றாராம்



யாழ்ப்பாணம், டிச.31

யாழ் மாநகர சபையில் ஆதரவை இழந்தமையை அடுத்து மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் பதவி விலகுகின்றார். வருட இறுதித் தினமான இன்று இரவு 10 மணியுடன் தாம் பதவி விலகுகின்றார் எனத் தெரி விக்கும் இராஜினாமாக் கடிதத்தை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும், அதன் பிரதியை மாநகரசபை ஆணையாளருக்கும் நேற்றே அவர் அனுப்பி வைத்தார். ☞2

# மதமாற்ற கொள்கை உடையவரை யாழ் அரச அதிபராக நியமிப்பதா?

## சிவசேனை அமைப்பு ஆட்சேபனை



யாழ்ப்பாணம்,டிச.31

யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபராக மத மாற்ற கொள்கை உடையவர் ஒருவர் நியமிக்கப்பட உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன எனத் தெரிவித்து, அதை ஆட்சேபித்து சிவசேனை அமைப் பினரால் யாழ் மாவட்ட செயலகத்தின் ☞11

# இன்றும் நாளையும் மின்வெட்டு இல்லை

இன்று (டிசம்பர் 31) மற்றும் நாளை (ஜனவரி 01) மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என இலங்கைபொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

இருப்பினும், நாளை ஜன வரி 2 ஆம் திகதி முதல் தினசரி 2 மணி நேரம் 20 நிமிடங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படு மென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ☞11

# தாயாரின் பூதவுடலைத் தாமே பாதணியின்றிச் சுமந்த மோடி





இந்தியப் பிரதமர் நரேந் திர மோடியின் தாயார் ஹீரா பென், தமது 100 ஆவது வய தில் நேற்று அதிகாலை 3.30க்குக் காலமானர். நேற்றே அவரின் இறுதிக் கிரியைகள் காந்தி நகரில் நடந்தன.

தனது தாயாரின் பூதவு டலை வீட்டிலிருந்து வெளி வீதியில் இருந்த ☞11

## நாய் குட்டி மீது பாலியல் துன்புறுத்தல்:

# ஹிருணிகா தரப்பிடம் ரூ.150 கோடி நஷ்டஈடு கோருகிறார் ஆசு மாரசிங்க





வளர்ப்பு நாய் குட்டியொன்றை பாலியல் ரீதியில் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் எனத் தன் மீது போலிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர மற்றும் ஆதர்ஷா கரதனா ஆகியோரிடமிருந்து 150 கோடி ரூபா நட்ட ஈட்டைக் கோரி ☞11

# கடலட்டைப் பண்ணை வேண்டுமென கடற்றொழிலாளர்கள் யாழில் பேரணி




(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,டிச.31

கடலட்டைப் பண்ணையை வேண் டுமென வலியுறுத்தி நேற்று யாழ்ப்பா ணத்தில் பேரணியொன்று நடத்தப்பட் டது. ☞11

# 1 லட்சத்து 60 ஆயிரம் கிலோ சீன அரிசி வவுனியாவில் விநியோகிக்கப்படவில்லை

## களஞ்சியத்தில் ஒரு மாதம் தேக்கம் என விசனம் தெரிவிப்பு




சீனா அரசாங்கத்தால் வவு னியா மாணவர்களுக்கு வழங் கப்பட்ட ஒரு இலட்சத்து 58900 கிலோ அரிசி மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை என குற் றச்சாட்டப்பட்டுள்ளது.

சீன அரசாங்கத்தால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு லட்சத்து 58 ஆயிரத்து 900 கிலோ அரிசி வவுனியாவில் நீண்ட நாளாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள போதும் இதுவரை விநியோகிக்கப்படவில்லை என பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து பாடசாலை செல்லும் தரம் 5 இற்கு உட்பட்ட ☞11

# பயணிகள் துறைமுகமாக காங்கேசன்

காங்கேசன் துறை துறைமு கத்தை உள்வருகை மற்றும் வெளியேற லுக்கு அனுமதியு டைய துறைமுக மாக அறிவித்து அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியி டப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சர் டிரான் அலஸி னால் இந்த வர்த்த மானி ☞11

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே வழி இதுதான். பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

சரி. இனி என்ன? தாம் மேயர் பதவியில் இருந்து ராஜினாமா செய்து விட்டால், அதனுடன் யாழ் மாநகர சபையும் கலைந்து விடும் என்பதுதான் மணிவண்ணனின் நிலைப்பாடு. சட்டத்தை அப்படித் தான்அவர்வியாக்கியானம்செய்கின்றார். அதை மீறி, புதிய மேயர் தெரிவுக்கு உள்ளூராட்சி ஆணையாளர் நடவடிக்கை எடுத்தால், அதற்கு எதிராகத் தான் நீதிமன்றத்துக்குப் போய் தடை வாங்குவார் என்கிறார் மணிவண்ணன். அப்படித் தான் ஊடகங்களுக்கு அவர் தெரிவிக்கின்றார். நல்லது. செய்து பார்க்கட்டும்.

இரண்டு தடவைகள் வரவு - செலவுத் திட்டம் தோற்றமையால் ஒரு மேயர் பதவி இழந்து, அடுத்து அந்த இடத்துக்கு வரும் மேயரும் நெருக்கடி காரணமாக, வேறு வழியின்றி, தமது பதவியை ராஜினாமாச் செய்தால் சபை கலைந்ததாகும்என்ற சட்ட ஏற்பாட்டை, இப்போதும் தமக்கு சாதகமாக வியாக்கியானம் செய்கின்றார் மணி என்றே தோன்றுகின்றது.

அது, 2020 டிசம்பரில், ஆர்னோல்ட் பதவியிழந்து, மணி புதிய மேயராகப் பதவியேற்ற சமயத்தில் நிகழ்ந்திருந்தால் நடக்கப் பொருத்தமானதாகவும் சரியானதாகவும் இருக்கும். அச்சமயத்தில் புதிய மேயராகப் பதவியேற்ற மணிவண்ணன், அப்போது, தமது வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றவும், சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் போதிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்று கருதி, தமது பதவியை ராஜினாமாச் செய்திருந்தால் நடக்கக் கூடியது. அக்காலம் முடிந்து, அதற்குப் பின்னர் இரண்டு வரவு - செலவு திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி, இப்போது மூன்றாவது வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் அவர் ராஜினாமா செய்யும் போது, அந்த முன்னைய சட்ட கருத்துக்கள் பொருந்தி வரா.

ஆனால், மாகாண ஆளுநருக்கு நியதிச் சட்டவாக்கத்திற்கான முழு அதிகாரம் உண்டு என்று சட்டத்தை வியாக்கியானம் செய்யும் ஆளுநரும், அவரது பணியாளர் தொகுதியுமே இப்போது பதவியில் உள்ளனர்.

அவர்கள் மணிவண்ணன் கூறுகின்றமை போல மேயரின் ராஜினாமாவுடன் யாழ் மாநகர சபையும் கலைந்து விட்டது என்று தீர்மானித்து, முடிவெடுத்து, நடைமுறைப்படுத்த மாட்டார்கள் என்று கூறுவதற்கும் இல்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அப்படி சபை கலைந்தது என்று முடிவெடுத்து, உள்ளூராட்சி ஆணையாளரோ அல்லது ஆளுநரோ அம்முடிவை நடைமுறைப்படுத்த முயன்றால், சபையின் 47 உறுப்பினர்களில் எவரும் நீதிமன்றத்திற்குப் போக முடியும். சபையை முறையற்ற விதத்தில் கலத்தமைக்காக சபை உறுப்பினர்களுக்கு தமது சொந்தப் பொக்கட்டிலிருந்து அதிகாரிகள் நஷ்டஈட்டைச் செலுத்த வேண்டிக் கூட நேரிடலாம்.

மேயர் மணிவண்ணனின் ராஜினாமாவில் கூட ஒரு தவறு உண்டு. அவர் தமது ராஜினாமாக் கடிதத்தை உள்ளூராட்சிக்குப் பொறுப்பான ஆணையாளருக்கு எழுதி விட்டு, மாநகர ஆணையாளருக்குப் பிறகு பிரதியிட்டிருக்கின்றார் எனக் கூறப்படுகிறது. ஆனால் சட்டப்படி அவர் தமது ராஜினாமாக் கடிதத்தை யாழ் மாநகர் ஆணையாளருக்குத்தான் அனுப்ப வேண்டும்.

அதிகாரிகள் இனி எப்படி நடந்து கொள்ளுவார்கள் என்பதில் தங்கி இருக்கின்றது யாழ். மாநகர சபையின் எதிர்காலம்.

பார்ப்போம் பொறுத்திருந்து...!

- மின்னல் -

## இனவாத சிந்தனைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் அலுவலகமான அறிவகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அடிப்படையாகவே இனவாத எண்ணங்களுடன் தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரிப்பதற்குத் துணையாக இருக்கின்ற விஜயதாஸ ராஜபக்ஷ தமிழர்களை ஒற்றுமையாக வரவேண்டும்என்றுகூறுவதற்குஎந்தஅருகதையும் அற்றவராவார்.

நாளையுடன் (இன்றுடன்) முடிவடைகின்ற இந்த ஆண்டிலே முக்கியமான பல சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. உலகை அச்சுறுத்திய கொரோனா அச்சுறுத்தல்களில்இருந்துஓரளவுவிடுபட்டிருக்கின்றது நாடு. இலங்கையில் மிகப்பெரிய வெற்றியோடு ஜனாதிபதியாக - அதாவது போரையும் போர் காரணங்களையும் மையப்படுத்தி, சிங்கள மக்களிடமிருந்து அபரிமிதமான வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக -தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ அதே சிங்கள மக்களால் அடித்து விரட்டப்பட்ட மிகப்பெரிய வரலாற்றையும் இந்த ஆண்டு பதிவாக்கி இருக்கின்றது

அதேபோல உலகத்தில் பல்வேறுபட்ட நெருக்கடிகள் தோன்றியிருக்கின்றன. உக்கிரேனுக்கும் ரஷ்யாவுக்குமான மிகப் பெரும் போர் ஏற்பட்டிருக்கின்றது. இலங்கையில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

தமிழர்கள் தங்களுக்குள் இருக்கின்ற முரண்பாடுகளை களைந்து ஓரணியில் வரவேண்டுமென்று இலங்கையின் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். நாங்கள் எப்போதும் ஒற்றுமையாகவே எமது உரிமைகளுக்காக போரடி வருகின்றோம்.

சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் முரண்பாடுகளை உருவாக்குவது அவர்களே தான். அதாவது தமிழர்களினுடைய பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து, புத்தவிகாரங்களைஅமைப்பதற்கு உரிய அமைச்சராக அப்போது இருந்தவர் விஜயதாஸ ராஜபக்ஷ. தற்போது குருந்தூர் மலையிலே விகாரை அமைக்க வேண்டாம் என முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டுள்ள நிலையிலும் அந்தக் கட்டளையை மீறி மிகப் பெரிய விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இதனைப் பொலிஸார் தடுக்கவில்லை. நீதித்துறை தடுக்கவில்லை. இவ்வாறு தமிழர்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்தல், பூர்வீக வழிபாட்டு இடங்களில் விகாரைகள் அமைத்தல், போன்ற இனவாதச் செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்ற விஜயதாஸ ராஜபக்ஷ தமிழர்களை ஒற்றுமைப்பட்டு வர வேண்டும் என்று கூறுவதற்கு எந்தவித அருகதையும் அற்றவர்.

தமிழர்களாகியநாங்கள்எப்பொழுதும் ஒற்றுமையாகத்தான் இருக்கின்றோம். எங்கள் உரிமைகளுக்காகத்தான் நாங்கள் பேசிக் கொண்டிருக்கின்றோம். எங்கள் உரிமைகளுக்காகத்தான் நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வு திட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சம்பந்தன் ஐயா தலைமையில் அரசிடம் கையளித்திருக்கின்றோம். அதே தீர்வு திட்டத்தை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், மட்டக்களப்பைச் சேர்ந்த சிவில் சமூக அமைப்பு என்பனவும் கையளித்திருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களையும் ஒரு தேசிய இனமாக அங்கீகரித்து, அவர்களுக்கான ஒரு தீர்வுத் திட்டத்தை வழங்க வேண்டும் என தலைவர் பிரபாகரன் அவர்களும் முஸ்லிம் தலைவர்களோடும் இராஜ தந்திரிகளோடும் பேசியிருக்கின்றார். நாங்கள் ஒற்றுமையாக, ஒன்று பட்டுத்தான் இருக்கின்றோம். ஆனால் அடிப்படையில் இனவாதச் சிந்தனைகளையும் எண்ணங்களையும் கெண்டுள்ள விஜயதாஸா ராஜபக்ஷ, நிமால் சிறிபாடி சில்வா, சந்திரிக்கா, ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் பிளவுளை ஏற்படுத்த முனைகின்றனர். - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகமான அறிவகத்தில் முன்னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா தலைமையில் நடைபெற்ற வட்டார உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் இந்தக் கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினுடைய தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் மற்றும் கரைச்சி பிரதேச சபை தவிசாளர், கட்சியின் செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ் நகர மேயர் மணி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட மாகாணத்தில் மிகவும் முக்கிய உள்ளூராட்சி அமைப்பான யாழ்ப்பாணம் மாநகர சபையில் மாநகர முதல்வர் சமர்ப்பித்த வரவு செலவு - திட்டம் முதல் முறை 2022.12.21 அன்று சபையில் தோல்வியடைந்தது. இரண்டாவது முறையும் அதற்கு ஆதரவு கிடைக்காது என்ற சூழல் ஏற்பட்ட நிலையில் அவர் பதவி விலக நேரிட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற மாநகர சபை தேர்தலில் அவர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினராக மாநகர சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 2020 ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலிற்கு பிறகு கட்சித் தலைவர்கஜேந்திரகுமார்பொன்னம்பலத்துடன் ஏற்பட்ட மோதல் காரணமாக கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார் என கட்சித் தலைமையால் பகிரங்க அறிவித்தல் விடப்பட்டது.

இதேநேரம் அவர் மாநகர சபை உறுப்பினராகத் தேர்தெடுக்கப்பட்டமையே சர்ச்சையை ஏற்படுத்தியது. சபை எல்லைக்குள் வசிக்காத எவரும் உள்ளூராட்சிசபைஉறுப்பினராகதேர்ந்தெடுக்கப்பட்டது உள்ளூராட்சி தேர்தல் விதியை மீறும் செயலாகும் என்று குறிப்பிட்டு மாநகர சபை எல்லைப் பரப்பிற்குள் வாழும் ஒருவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம.ஏ.சுமந்திரன் ஊடாக வழக்கு தொடர்ந்ததையடுத்து அவர் சபை நடவடிக்கைகளில் பங்கேற்க மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. எனினும் அவர் மீதான வழக்கைவழக்குத்தொடுநர்சட்டத்தரணி ஊடாக மீளப்பெற்றமையை அடுத்து அவர் மீண்டும் சபை அமர்வுகளில் பங்கு பெறும் வாய்ப்பு கிட்டியது.

இதேவேளை யாழ்ப்பாணம் மாநகர சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முன்னாள் முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட்டினால் 2021 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டம் 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 மற்றும் 27 ஆம் திகதிகளில் இரு தடவை சமர்ப்பித்து தோற்கடிக்கப்பட்டதன் மூலம் ஏற்பட்ட மாநகர முதல்வர் வெற்றிடத்திற்கு 2020.12.30 அன்று முதல்வராக வி. மணிவண்ணன் தேர்வு செய்யப்பட்டார்.

அவரது தேர்விற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 10 உறுப்பினர்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 10 உறுப்பினர்கள் ஆகியோருடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு உறுப்பினரும் ஆதரவளித்தனர்.

இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் 2021, 2022 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டங்களை நிறைவேற்றி சபையை நடாத்தியபோதும் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

(11ஆம் பக்கம் பார்க்க)







காலைக்கதிர்
Kalaikkathir

# அக்கரைப்பற்று பாடசாலையொன்றை மூடுமாறு மிரட்டுகிறார் அரசியல்வாதி!

## பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் குற்றச்சாட்டு

அக்கரைப்பற்று அஸ்-ஸபா கனிஷ்ட வித்தியாலயத்தை மூடுமாறு அதிகாரிகளை அங்குள்ள முஸ்லிம் அரசியல்வாதி ஒருவர் மிரட்டுகிறார் என்று அந்தப் பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் எஸ்.எம். லாபீர் குற்றம் சாட்டுகிறார்.

அக்கரைப்பற்றில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர் –

எங்களின் பிரதேசத்தில் உள்ள வறுமைக்குட்பட்ட மீனவ, விவசாய, கைத்தொழில் செய்யும் ஏழை குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் நீண்டதூரம் பயணித்து கல்விகற்க முடியாது என்பதால் பிரதேசத்தில் உள்ள முக்கிய சிவில் அமைப்புக்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்தவர்கள் இணைந்து எங்களின் முயற்சியால் உருவாக்கப்பட்ட கமு/ அக்/ அஸ்-ஸபா கனிஷ்ட வித்தியாலயத்தை மூடுவதற்கு முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முஸ்லிம் அரசியல்வாதியொருவர் தொடர்ந்தும் முயற்சித்து வருகிறார்.

கடந்த 2015 இல் இந்தப் பாடசாலையை உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு 2018 இல் இருந்து இந்தப் பாடசாலையை கிழக்கு மாகாண கல்வியமைச்சின் பூரண அனுமதியுடன் இயங்க வைத்து வருகின்றோம்.

மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர், மாகாண கல்வி பணிப்பாளர், வலயக்கல்வி பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரி உட்பட பல்வேறு அரச அதிகாரிகள் நன்றாக ஆராய்ந்த பின்னரே இந்தப் பாடசாலையை உருவாக்க அனுமதி வழங்கினர்.

இப்போது அந்த அதிகாரிகளுக்கும் மிரட்டல் விடுக்கும் நிலையில் முன்னாள் அமைச்சர் செயற்படுகிறார்.

பாடசாலைக்கான காணி விடயத்தில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளருக்கும் அவர் இதுவிடயத்தில் நெருக்கடி கொடுத்து வருகிறார்.

அரசாங்க அதிகாரிகளை மிரட்டும் இவரது செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை, நாடாளுமன்றம் ஆகிய இடங்களுக்கும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அரசியல் அதிகாரம் இருக்கிறது என்பதற்காக எந்த அரசியல்வாதியும் இப்படியான காட்டுமிராண்டித்தனமான செயலை செய்ய அனுமதிக்க முடியாது.

இவருக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளோம். மாவட்ட அபிவிருத்திக்குழுவிலும் இதுதொடர்பில் அவர் பேச முயன்று மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் மற்றும் ஏனைய எம்.பிக்களுடன் பிரச்சினை ஏற்பட்டதாக அறிகின்றோம். எந்த ஒரு நிதானமான மனிதரும் பாடசாலைகளை மூட யோசிக்க மாட்டார்கள். ஆனால் குறித்த அரசியல்வாதி யோசிக்கிறார்.

இந்த பாடசாலை விடயத்தில் அந்த அரசியல்வாதி தொடர்ந்தும் சிக்கல்களை கொடுத்தால் ஜனாதிபதி செயலகத்தின் முன் மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் ஆகிய நாம் அனைவரும் திரண்டு போராடுவோம்.




எங்களது பாடசாலை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இந்த வலயத்தில் உள்ள 72 பாடசாலைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறிக் கொண்டு வருகின்றது.

திறமையான மும்மொழி ஆற்றல் கொண்ட அதிபரை பாடசாலைக்கு அதிபராகக் கொண்டுவந்துள்ளோம். நாட்டின் இன்றைய நெருக்கடியிலும் பாடசாலையில் பௌதீக வள அபிவிருத்தி இடம்பெறுகின்றது. இவைகளெல்லாம் தான் இந்த அரசியல்வாதி போன்றவர்களுக்கு உறுத்தலாக உள்ளது.

பாடசாலை சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுவருகிறது. கட்டடங்களுக்கு கழிவெண்ணெய் ஊற்றி அசிங்கப்படுத்துகிறார்கள். இவற்றையெல்லாம் செய்யும் இவர்கள் யார் என்பதை நாங்கள் அறிந்து வைத்துள்ளோம்.

முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஒருவர் மாகாண சபைகலையை இருக்கும் இறுதி தருவாயில் முன்னாள் மாகாண பணிப்பாளராக இருந்து மாகாண கல்வியமைச்சராக இருந்தவரின் உதவியுடன் பாடசாலையின் பெயரையும் எவ்வித உரிய முறைகளுமின்றி அடாத்தாக மாற்றினார்.

இப்படி இந்த பாடசாலை மீது பலரும் அநியாயங்களை செய்து வருகின்றனர். இவற்றுக்கெல்லாம் நாங்கள் யாரையும் அனுமதிக்க முடியாது. இப்படிப்பட்டவர்களை அமைச்சரவையில் இணைந்துக் கொண்டால் நாடு நாசமாகிவிடும்.

தனது சுயநலவாத தேவைக்காக சாய்ந்தமருது மக்களுக்கு நகரசபையை பெற்றுத்தருவதாக ஏமாற்றியதுடன் அதியுச்ச நிர்வாக திறமையும் சிவில் நிர்வாக சேவையில் உயர் தேர்ச்சியும் கொண்ட ஏ.எல்.எம். சலீம் எனும் ஆளுமையை இரண்டும் கெட்ட நிலைக்கு தள்ளிவிட்டு இப்போது பிரச்சினைகளை உருவாக்கும் அரசியல்வாதி உல்லாசமாக கொழும்பில் சொகுசு வாழ்க்கை வாழ்கிறார்.

கல்வியின் அருமை தெரியாத இவரை கடந்த காலங்களில் கல்வி பிரதியமைச்சராக நியமித்திருந்தார்கள். இவருக்கு இனிவரும் காலங்களில் அமைச்சுப்பதவி வழங்கினால் அதைவிட அநியாயம் எதுவுமில்லை. – என்றார்.

# தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு எதிர்ப்பு தெரிவித்து கிராமஉத்தியோகத்தர்கள் கவனவீர்ப்பு போராட்டம்!



யாழ். தெல்லிப்பழை பொலிஸாருக்கு எதிராக, தெல்லிப்பழை பிரதேச செயலக கிராம சேவகர்கள், பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று (வெள்ளிக்கிழமை) கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டம் தொடர்பாகத் தெரியவருகையில் –

ஜே -239 பிரிவு கட்டுவன் மேற்கு கிராம சேவகர் அலுவலகம் சில தினங்களுக்கு முன்னர் தீயிட்டு எரிக்கப்பட்டது. இது தொடர்பாகத் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை தெல்லிப்பழை பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'சமாதான அலுவலர், சமாதான நீதிவானுக்கே இந்த நிலையா?, இன்று எங்களுக்கு நாளை உங்களுக்கு, எங்கள் சேவைக்கு பாதுகாப்பு இல்லையா?, அலுவலகத்தை சேதமாக்கியோரை கைது செய், தீ வைத்தது உங்கள் கை வெந்தது உங்கள் சொத்து' என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



# குவேனி காலம் முதல் இன்றுவரை இலங்கை ஒரு சபிக்கப்பட்ட தேசமாகவே உள்ளதாம்!

## சந்தியா எக்னலிகொட தெரிவிப்பு

இலங்கை ஒரு சபிக்கப்பட்ட தேசம் குவேனி காலத்திலிருந்தே சபிக்கப்பட்ட தேசம் என சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார். பேட்டியொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –



இலங்கை ஒரு சபிக்கப்பட்ட தேசம், குவேனியின் காலம் முதல் பெண்கள் இந்த நாட்டை சபித்துள்ளனர். அரசியல் அதிகாரத்துக்கு வந்த அனைவரும் இந்த நாட்டின் பெண்களின் மகிழ்ச்சியைப் பறித்துள்ளனர்.

தங்களுக்கு நீதி வழங்கப்படவில்லை என்பதை அறிந்ததும் பெண்கள் இந்த நாட்டை சபித்துள்ளனர். இந்த நாடு இந்த சாபங்களில் இருந்து விடுபடாது, இந்த நாடு சாபங்களில் இருந்து விடுபடவேண்டும் என்றால் பெண்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும்.

தற்போதைய அரசாங்கம் கூட காணமல்போனவர்கள் விடயத்தில் அவர்களது குடும்பத்தவர்களுக்கு நீதியை நிலைநாட்டவேண்டியது தனது கடமை எனக் கருதவில்லை. உண்மையில் எந்த அரசாங்கமும் இது தனது கடமை எனக் கருதவில்லை. அவர்கள் தங்களால் ஐ.நாவையும் உலக நாடுகளையும் ஏமாற்ற முடியும். இந்த பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பதற்காக எதனையும் செய்யவேண்டியதில்லை எனக் கருதினார்கள். இதற்கும் மேலாக அவர்கள் ஐ.நாவின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளவேண்டியதில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

# வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையிடுபவர் கட்டுநாயக்க பொலிஸாரால் கைதாகினார்!

ஆடியம்பலம் பிரதேசத்தை அச்சுறுத்திய 'பலு மூனா' என்பவரை கட்டுநாயக்க பொலிஸார் வியாழக்கிழமை கைது செய்துள்ளனர். பலு மூனா என்று அழைக்கப்படும் கலிங்க நளீன் மதுசங்க என்ற 26 வயதுடைய திருமணமாகாத ஆடியம்பலத்தைச் சேர்ந்தவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவர் வேறொரு குழுவை உருவாக்கி, வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையடித்தும் கத்திமுனையில் வாகனங்களைக் கடத்தியும் பிரதேச மக்களை அச்சப்படுத்தி வருபவர் என பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மேலும், ஹெரோயின் பாவனைக் குற்றச்சாட்டின் கீழ் 6 தடவைகள் நீதிமன்றில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். இவரைக் கைது செய்த பின்னர், கொழும்பு பகுதியில் இவரால் அடகு வைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களை கட்டுநாயக்க பொலிஸார் கைப்பற்றினர்.

# புதிதாகப் பதியும் வாகன இலக்கத் தகடுகளில் மாகாண எழுத்துகளை 2023 முதல் நீக்க ஏற்பாடு!

வாகன இலக்கத் தகடுகளில் உள்ள மாகாணத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்துகள் 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் புதிய வாகனப் பதிவுகளின் போது அகற்றப்படும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாகாணங்களுக்கு இடையில் வாகனங்களை விற்பதாலோ அல்லது மாற்றுவதாலோ இலக்கத் தகடுகளை மாற்ற வேண்டிய போது, வாகன உரிமையாளர்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடுவதால் 2023 ஆம் ஆண்டு முதல் இந்த நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முக்கியமான இரு வாரங்கள்

**இன்று ஆண்டின் இறுதி நாள். பல்வேறு அரசியல் சூறாவளிகளையும், மோசமான பொருளாதார நெருக்கடிகளையும், சொல்லொணாத் துன்ப துயரங்களையும் தந்து விட்டு நம்மை விட்டு நீங்குகின்றது இந்த ஆண்டு.**

**நாளை பிறக்கும் புத்தாண்டு இலங்கை நாட்டைப் பொறுத்தவரை தீர்க்கமான சில விடயங்களை முன்னிறுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

**அதிலும் தைப்பொங்கல் வரையான முதல் இரண்டு வாரங்களும் மிகவும் முக்கியமானவை.**

**இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிமுறைகள் குறித்து பெப்ரவரி 4 சுதந்திர தினத்திற்கு – அதாவது அடுத்த ஐந்து வாரங்களுக்குள் – முடிவு எட்டப்படும் என அறிவித்து, அதன் வழியே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க காரியமாற்றி வருகையில், அது தொடர்பான மரதன் கலந்துரையாடல்கள் 10,11,12,13 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன. அந்த உரையாடல்களில், கடந்த ஏழரை தசாப்த காலமாக நீடிக்கும் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு அல்லது வழிவகை எட்டப்பட கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் இக்காலகட்டம் முக்கியமானதாக அமைகின்றது.**

**அது மாத்திரமல்ல, நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் ஒரு தேர்தல் இப்போது தேவை என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. அத்தகைய வாக்களிப்புக்கு – மக்களின் தீர்மானத்துக்கு – இடம் அளிக்கக்கூடிய உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படக்கூடிய சூழலும் வந்துள்ளது. அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு நாளை பிறக்கும் புது வருடத்தின் முதல் வாரத்தில் தேர்தல் ஆணையத்தினால் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாலும் வருட ஆரம்பம் முக்கியத்துவம் பெறுகின்றது.**

**நாட்டின் நாடாளுமன்றமும் வருட முதல் வாரத்தில் – ஜனவரி ஐந்தாம் திகதி வியாழக்கிழமை கூட விருகின்றது.**

**நடக்கக்கூடிய உள்ளூராட்சி தேர்தலை எப்படியேனும் ஒத்திவைக்கும் கபடத் திட்டத்தில் இருக்கும் அரசு, அதற்கான சட்டமூல ஏற்பாடுகளை இந்த முதல் வார நாடாளுமன்ற அமர்வின் போது திடுதிப்பெனக் கொண்டு வர எத்தனிக்கலாம் என்று பேச்சடிபடுகின்றமையாலும் இந்த முதல் வாரம் முக்கியத்துவம் பெறுகின்றது.**

**உலக நாடுகளில் வேகமாகப் பரவி பெரும் கொரோனாத் தொற்று இங்கும் கூட தன் கைவரிசையைக் காட்டலாம் என்று செய்தி வட்டாரங்கள் பீதியை கிளப்பி வருகின்றன.**

**இந்தப் பின்புலத்தில் இந்த ஆண்டில் இலங்கை நாட்டின் செல்நெறி எந்தப் பாதையில் இருக்கும் என்பதை, நாளை பிறக்கும் புத்தாண்டின் முதல் இரு வாரங்கள் தீர்மானிக்கும் என்று கூறுவதில் தப்பில்லை.**

## காட்டு யானைகளால் விவசாய நிலங்கள் புத்தளம் எலுவாங்குளம் பகுதியில் நாசம்!

### விவசாயிகள் கவலை



புத்தளம் எலுவாங்குளம் பகுதியில் காட்டு யானைகள் விவசாய நிலங்களை துவம்சம் செய்துள்ளன என அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

புத்தளம் வண்ணாத்திவில்லு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பழைய எலுவாங்குளம் பகுதியில் இம்முறை சுமார் 600 ஏக்கர் நிலப் பரப்பில் பெரும்போக விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாக காட்டு யானைகள் அந்தப் பகுதியில் உட்புகுந்து விவசாய நிலங்களைத் துவம்சம் செய்துவருகின்றன என அந்தக் கிராம விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி பகுதியில் முறையான மின்சார வேலிகள் இல்லாமையின் காரணத்தாலே காட்டு யானைகள் விவசாயக் கிராமத்தில் உட்புகுகின்றன என இதன்போது விவசாயிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவைகள் கூறியும் அதிகாரிகள் அசமந்தப் போக்காக செயற்படுகின்றனர் என அந்தக் கிராம விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தாம் நுண்கடன்களைப் பெற்றும் தங்க நகைகளை அடகு வைத்தும் உரப் பிரச்சனை மற்றும் எரிபொருள் பிரச்சினைகளுக்கு மத்தியில் விவசாயத்தை மேற்கொண்டு வருகின்ற நிலையில் காட்டு யானைகளின் தொல்லைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு மேற்படி பகுதிக்கு யானை வேலியை அமைத்துத் தருமாறும் காட்டு யானைகளை காட்டிற்குள் விரட்டித் தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## தமிழ் மக்களுக்காக ஒரு துளி வியர்வைகூடச் சிந்தாதவர்கள் அவர்களுக்காக ஆயுதம் ஏந்தியோரை 'துரோகி' என்கிறார்கள்!

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் காட்டம்




கட்சிகளின் இணைவு என்பது முக்கியமல்ல. அது ஓர் அர்த்தபூர்வமாக இருக்க வேண்டும். தமிழ் கட்சிகளுக்குள் நான் பெரிய கட்சி நீ பெரிய கட்சி என்ற நிலைப்பாடு மாறும் வரை ஒற்றுமையும் இல்லை, தமிழ் மக்களுக்கு விடுதலையும் இல்லை என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் சமத்துவக் கட்சியின் வன்னி தலைமை அலுவலகம் திறப்பு விழாவின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

நண்பர் நாடாளுமன்ற உறுப்பினர் விநோநோகராதலிங்கம் கோரிக்கை ஒன்றை முன் வைத்தார். ஏன் சமத்துவக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணையக் கூடாது என்று. நாங்கள் இணையமாட்டோம் என்று எமது கதவுகளை இழுத்து மூடிவிடவில்லை. ஆனால் முதலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் ஒற்றுமை இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும் போதே இணைவும் அர்த்தபூர்வமாகக் காணப்படும். அதுவே தமிழ் மக்களுக்கு நன்மையையும் பெற்றுக்கொடுக்கும்.

நாட்டில் இனங்களுக்கிடையேயும், இனத்துக்குள்ளும் சமத்துவம் இன்மையே எமது கட்சியின் உருவாக்கத்துக்குக் காரணமாக அமைந்தது. எங்களுடைய கட்சியில் அதிகளவான பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். ஆனால் இங்கு மிக கவலையோடு ஒரு விடயத்தைக் கூறுகின்றேன். தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர், புலிகள் அமைப்பில் அனைத்து துறைகளிலும் மகளிர் அமைப்புக்களை உருவாக்கி பெண்களின் சமத்துவத்தை செயல் வடிவில் காட்டியவர். ஆனால், அவரால் உருவாக்கப்பட்ட கட்சி என்று சொல்லிக்கொள்ளும் தமிழரசுக் கட்சியை சேர்ந்த சிலர் கிளிநொச்சியில் சமத்துவக் கட்சியின் பெண் வேட்பாளர்களை நோக்கி கடந்த உள்ளூராட்சி தேர்தலின் போது மிக மிக கேவலமாக அவதூறுகளை செய்தார்கள். சபையில் பேசமுடியாத வார்த் தைகளை பயன்படுத்தினார்கள் பெண்களுக்கு சமத்துவத்தை வழங்கிய தலைவரால் உருவாக்கப்பட்ட கட்சியை சேர்ந்தவர்களா இவர்கள் என்று மக்கள் ஆச்சரியப்படும் அளவுக்கு அவர்களின் செயற்பாடுகள் காணப்பட்டன.

இன்றுள்ள பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காக போராட்டக் காலங்களில் ஒரு துளி வியர்வை சிந்தாதவர்கள். இவர்கள்தான் அன்று வியர்வை சிந்தியவர்களுக்கு, ஆயுதம் ஏந்தி போராடியவர்களுக்கு, துரோகிகள் என்று பட்டம் வழங்குகின்றவர்களாகக் காணப்படுகின்றனர். துரோகி பட்டம் வழங்குவதற்கு இவர்களுக்கு என்ன அருகதை உள்ளது. இன்று ஆயுதம் ஏந்தி போராடியவர்கள் துரோகிகள் என்றால் அவர்களை ஆதரித்த மக்களும் துரோகிகளா?. – எனத் தெரிவித்தார்.

## போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளவரின் திருமண விண்ணப்பத்தை நிராகரித்த அக்கரைப்பற்று பள்ளிவாசல்

போதைப்பொருள் பயன்படுத்தும் நபர் ஒருவரின் திருமணத்துக்கான சமய அங்கீகாரத்தை அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசல் நிராகரித்துள்ளது.

அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசல் பிரதேசத்திற்குள் வசித்து வரும் நபர் ஒருவரின் திருமணத்தை நடத்தி வைக்குமாறு ஜும்மா பெரிய பள்ளிவாசலுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

மேற்படி விண்ணப்பத்தை பரிசீலனைக்காக எடுத்துக் கொண்ட ஜும்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை, அந்த நபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், திருமண சடங்கை நிறைவேற்றி வைப்பதை தவிர்த்துள்ளதுடன் விண்ணப்பத்தையும் நிராகரித்துள்ளது. அத்துடன் திருமணத்துக்கான மணமகனை போதைப்பொருள் புனர்வாழ்வு மையத்தில் அனுமதிப்பதுடன் அங்கிருந்து நற்சான்றிதழ் பத்திரம் பெற்று மீண்டும் பள்ளிவாசலில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இந்த விடயம் சமூக ஊடகங்களில் முக்கியபேசு பொருளாக மாறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## 1,060 கோடி ரூபா செலவிலான 215 வேலைத்திட்டங்களில்

# 175 வேலைத் திட்டங்கள் நிறைவு நகர அபிவிருத்தி அதிகார சபை!

கொழும்பு, டிசெ. 31

திறைசேரியால் ஒதுக்கப்பட்ட 1060 கோடி ரூபா செலவிலான 215 வேலைத்திட்டங்களில் சுமார் 175 திட்டங்கள் முழுமையாக நிறைவடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, மேலும் 40 திட்டங்களின் பணிகளை நிறைவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வருடம் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாகவே, அவற்றை நிறைவு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

ஆனால், அந்த 40 திட்டங்களின் பணிகளை அடுத்த ஆண்டுக்குள் நிறைவு செய்ய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடமிருந்து அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, நகர அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப் படுத்தப்பட்ட நூறு நகரங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாட்டின் அனைத்துப் பகுதிகளும் 117 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நகர்ப்புற மையங்களை உள்ளடக்கியதுடன் அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 116 நகரங்களில் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. 110 நகரங்களின் பணிகள் தற்போது முழுமையாக முடிவடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பணிகள் நிறைவடைந்த 110 நகரங்களில் நடைபாதைகள், நகர்ப்புற திறந்தவெளி நிலத்தில் வடிகால் அமைப்புகள், பயணிகள் தங்குமிடங்கள் மற்றும் சுகாதார வசதிகள் போன்றவை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒன்பது மாகாணங்களில் உள்ள திட்டங்களுக்கு திறைசேரியால் ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி பஸ் நிலையம், மக்கள் கண்காட்சி, பொதுச் சந்தை ஆகியன இந்த வருடம் நடைமுறைப்படுத்துவதற்காக 44 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதில் 29 திட்டங்களின் பணிகள் நிறைவடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மேலும் அரச நிறுவனங்களுக்கு திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கிய ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி 22 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு, இதன்கீழ் 5 திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. நாடு எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியால், 13 திட்டங்களின் பணிகள் மந்த கதியிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பேர வாவியைச் சுற்றி நடைபாதை மற்றும் பொது வசதிகள் அபிவிருத்தித் திட்டத்தின் அத்தியாவசியப் பணிகள் மாத்திரமே நிறைவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## கல்முனையில் ஐஸ் போதைப்பொருளை விநியோகித்த 22 வயது இளைஞர் கைது!

ஐஸ் போதைப்பொருளை விநியோகித்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப் படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றை அடுத்து வியாழக்கிழமை இரவு மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லடி விவேகானந்த பெண்கள் பாடசாலைக்கு முன்பாக வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் கல்லடி பகுதியை சேர்ந்த 22 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்துஜஸ்போதைப்பொருள் 2 கிராம் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச்சோதனை நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய அம்பாறை மாவட்டபதில் கட்டளை அதிகாரியும் மட்டக்களப்பு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகருமான நளீன் பெரேரா ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்க மேற்பார்வையில் பொலிஸ் பரிசோதகர் எஸ். எம்.பி.பி.எம் டயஸ் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் கன்டபிள்களான பிரியங்கர, பிரசன்ன, நிமேஸ், பியுமகே, சாரதி குணபால அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்துசந்தேகநபரைகைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்றுபொருள்களுடன் காத்தான்குடி பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியதுடன் விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# மரண அறிவித்தல்



## நடராசா சிவரட்ணம்

(ஓய்வு நிலை உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி, வடமாகாணம்)

**மலர்வு** 25 ✿ 02 ✿ 1950

**உதிர்வு** 28 ✿ 12 ✿ 2022

ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறையினைப் பிறப்பிடமாகவும் முருகையன் கோவிலடி, வல்வெட்டித்துறையினை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவரட்ணம் அவர்கள் 28.12.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான நடராசா வள்ளியம்மாள் தம்பதிகளின் புதல்வனும் காலம் சென்றவர்களான சிவலிங்கம் அருந்ததி தம்பதிகளின் மூத்த மருமகனும் நளினி (வசந்தி) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி பிரதீபா சசிகுமார் (ஆசிரியை), சாரூபன் சிவரட்ணம் (நிர்வாக இயக்குனர் V2 Travels மற்றும் கனடா குடி வரவு ஆலோசகர்), திருமதி காருண்யா மாதீபன் (முன்னாள் உதவி முகாமையாளர் - மக்கள் வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு வே.சசிகுமார், திருமதி சா.விசாந்தினி, திரு க.மாதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிழினியா (அமரர்), அருள்சாயித்யன், அருந்ததி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் 02.01.2023 (திங்கட் கிழமை) அன்று மதியம் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக மயிலியதனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்.
(0772367407)


STUDY IN INDIA - TAMILNADU

ADMISSIONS OPEN 2022 - 2023

For more details
Call: 076 817 0077 / 021 492 7780

ENGINEERING [B.E. / B.Tech]
AERONAUTICAL ENGINEERING
CIVIL ENGINEERING
MECHNICAL ENGINEERING
INFORMATION TECHNOLOGY
COMPUTER SCIENCE ENGINEERING
ELECTRONICS & COMMUNICATION ENGG.

UGC | Recognized University Awarded Degree

A+ NAAC

Excel™ TAMILNADU, INDIA

COMMERCE
B.Com. | B.Com-CA
B.B.A. | B.Com. (AF)

SCIENCE B.Sc.,
Information Technology
B.C.A. | Computer Science
Mathematics | Physics
Microbiology | Bio-chemistry

ARTS
B.A. English, Tamil
Textile & Fashion Designing | Vis.com.
Costume Design & Fashion

POLYTECHNIC
Eligible with O/L
AUTO | MECH
CIVIL | ECE | EEE





ADMISSION OFFICE
Excel Lanka, 551A, Kasthuriyar Road, Jaffna. ( Near Jaffna Hindu Primary School)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# தனபாலசிங்கம் பொய்மையால் தன்னை மூடி மறைக்கப் பார்க்கிறார்!

**- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -**

**காலைக்கதிர் ஆசிரியர் அவர்களுக்கு, உங்களின் சென்ற சனிக்கிழமை வெளியீட்டில், மூத்த தமிழ்ஊடகவியலாளர் என்று சொல்லப்படும் திரு.வீரகத்தி தனபாலசிங்கம் அவர்கள் எழுதிய, என்னைப் பற்றிய சில குறிப்புகளுக்கு மறுப்புரை தெரிவிக்கும் முகமாகவே இதனை எழுதுகிறேன்.**




'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற கேள்வி பதில் பகுதியை நூறு வாரங்களாய் முரண்பாடுகள் ஏதுமின்றி நிறைவேற்றித் தந்த உங்களைப் பாராட்டி எழுதும் போது, இலங்கைப் பத்திரிகைகள் சிலவற்றுடன் எனக்கேற்பட்ட பழைய கசப்புணர்வுகளைப் பற்றி நான் குறிப்பிட்டு எழுதியதில், தன்னைப் பற்றி நான் எழுதிய விடயம் தவறென்று சுட்டிக்காட்டித் தனபாலசிங்கம் அவர்கள் வருந்தியிருந்தார்.

***

அதற்குப் பதிலுரைக்கும் முன்பாக ஒரு செய்தி, சில பத்திரிகை ஆசிரியர்களுடன் எனக்கேற்பட்ட கசப்புணர்வுகளை, அவர்களின் பெயர்களைச் சுட்டி நான் எழுதிய போதும், அந்த ஆக்கத்தைத் துணிவுடனும், நேர்மையுடனும் முழுமையாக வெளியிட்டீர்கள். அதுபோலவே, தனபாலசிங்கம் அவர்களும் எனது பெயர் சுட்டி எழுதிய மறுப்புரையையும் சென்ற வாரம் முழுமையாய் வெளியிட்டீர்கள். இந்த பாரபட்சமற்ற, நடுநிலையான செயற்பாட்டால் உங்களுக்கான 'மூத்த பத்திரிகையாளர்' என்ற அடைமொழியை நிஜப்படுத்திக் காட்டினீர்கள். மகிழ்கிறேன். இங்கு பலர் 'மூத்த பத்திரிகையாளர்' என்கின்ற அடைமொழியை ஆற்றலாலன்றி தமது வயதால் மட்டுமே நிரூபித்து வருகின்றனர். அதனால்த்தான் உங்களைத் தனித்துப் பாராட்ட வேண்டியிருக்கிறது. இனி விடயத்திற்கு வருகிறேன்.

***

தனபாலசிங்கம் அவர்கள் தனது பதிவில், உண்மைகளை அழகாக மூடி மறைத்துத் தன்மேல் மற்றவர்களுக்கு இரக்கம் உண்டாகும்படியாகவும், என்மேல் வெறுப்புண்டாகும்படியாகவும் எழுதியிருக்கிறார். அவர் சொன்னவற்றில் மறைக்கப்பட்டிருக்கும் பல விடயங்களை வெளிப்படுத்தவேண்டியது இப்போது எனது கடமையாகிறது. அதற்கு முன் எனது எழுத்தாற்றலை அங்கீகரித்து அவர் தந்திருக்கும் பாராட்டுகளுக்கு எனது நன்றிகள்!

***

'பழம் பண்டிதரின் பகிரங்கக்கடிதங்கள்' எனும் பகுதியை நான் 'தினக்குரலில்' எழுதவேண்டி வந்ததற்கான காரணத்தை முதலில் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். தேவைகருதியே இப் பதிவை நான் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த விடயம் தெரிந்தால்தான் தனபாலசிங்கம் அவர்கள் எனக்குச் செய்த, ஓரவஞ்சனையான, நடுநிலையற்ற செயற்பாட்டின் தாக்கம் மற்றவர்களுக்குப் புரியும்.

***

பிரபல யாழ் வர்த்தகர், திரு.எஸ்.பி.சாமி அவர்கள் தமிழர்களின் குரலைப் பாரபட்சமின்றி வெளியிட ஓர் பத்திரிகையை உருவாக்கவேண்டும் என நினைத்தார். அவர் மிகவும் பிரயத்தனப்பட்டு, பலரையும் ஒன்றிணைத்து 'தினக்குரல்' பத்திரிகையினை ஆரம்பித்தார். அக் காலத்தில் 'வீரகேசரியின்' அப்போதைய தலைவராய் இருந்த, 'வின்சஸ்லோஸ்' அவர்கள் தனது பத்திரிகை ஆசிரியர்களின் குழுவைக் கையாள்வதில் ஓர் சர்வாதிகாரியாகவே இயங்கிவந்தார்.

***

அவரின் செயற்பாடுகளில் வெறுப்புற்றிருந்த 'வீரகேசரி' ஆசிரியர் குழுவைச் சார்ந்த பலரும், எஸ்.பி.சாமி அவர்களின் நோக்கத்தை அறிந்து, மறைமுகமாக அவருடன் தொடர்பு கொண்ட பின்னர் 'சொல்லாமல் கொள்ளாமல் 'திடீரென 'வீரகேசரியை' விட்டு விலகி 'தினக்குரலில்' வந்து இணைந்தனர். அப்படி 'வீரகேசரியை' விட்டு ஓடிவந்தவர்களில் தனபாலசிங்கமும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அங்ஙனமாய் ஒரு பத்திரிகையை வீழ்த்த நினைத்து வஞ்சகமாய் வழி சமைத்தபோது, தனபாலசிங்கம் அவர்களின் பத்திரிகா.கா.கா.தர்மம் என்னாயிற்று என்று தெரியவில்லை?

***

இப்படியாய்க் கொழும்பில் 'தினக்குரல்' பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. இலங்கையைப் பொறுத்தவரை 'வீரகேசரியே' நெடுநாளாய் தமிழர்களின் ஆதரவு பெற்ற தேசியப் பத்திரிகையாய் கோலோச்சி வந்தது. 'தினக்குரல்' பத்திரிகையின் வருகையால் தனது 'தனியாட்சி' பங்கமுறும் என நினைத்த 'வீரகேசரி' நிர்வாகம் சினம் கொண்டது. அதனால், அளவுக்கதிகமான அலட்சியத்துடனும், திமிருடனும் 'தினக்குரல்' பத்திரிகை நிலைக்காது என்பதாய் ஒரு பத்தியை 'வீரகேசரி' வெளியிட்டது. அக் கட்டுரையில் இருந்த அலட்சியம் கண்டு, நான் கோபமுற்றேன். அக் கட்டுரையைக் கண்டித்து ஓர் கடிதம் வரைந்தேன். அதனை 'தினக்குரல்' வெளியிட்டது.

***

அக்காலத்தில் இப்போது போன்று இணைய ஊடகங்கள் விருத்தி பெற்றிருக்கவில்லை. அதனால் 'வீரகேசரியின்' ஆதரவு எங்களது கழகத்திற்கு அவசியமாகவும் இருந்தது. 'வீரகேசரியை' கண்டித்து எவராவது எழுதினால், அப் பத்திரிகை அவர்களை முற்றாக நிராகரிக்கும் என்பது தெரிந்தும், துணிந்து அப் பதிலை நான் எழுதினேன். அந்நேரத்தில் அக்கட்டுரைக்குச் சவால் விடுத்துப் பதில் உரைக்கும் தெம்பு 'தினக்குரலில்' இருந்த, 'மூ.மூ.மூத்த' பத்திரிகையாளர் எவருக்கும் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

***

'வீரகேசரியைக்' கண்டித்து நான் எழுதிய கட்டுரையைப் படித்துவிட்டுத் 'தினக்குரலின்' நிர்வாக இயக்குனர் எஸ்.பி.சாமி அவர்கள், 'தினக்குரலில்' வாராவாரம் எழுத வேண்டும் என்று என்னை வற்புறுத்தினார். அவரது வற்புறுத்தலும், சமூகம் பற்றிய என் உணர்வலைகளை மக்களோடு பகிர்ந்து கொள்ளும் என் ஏக்கமும் ஒன்றுசேர, எழுதினால் என்ன? என்று தோன்றிற்று. 'பண்டிதர்' எனும் புனைபெயரில் 'பழம் பண்டிதரின் பகிரங்கக் கடிதம்' என்ற பத்தியை எழுதத் தொடங்கினேன்.

***

நான்தான் எழுதுகிறேன் என்று தெரியாமலே எனது கடிதங்கள் மக்கள் மத்தியில் பிரபலப்படத் தொடங்கின. 'தினக்குரலுக்கு' அக்கடிதங்களால் ஏற்பட்ட பிரபலத்தை எவராலும் மறுக்க முடியாது. 'யார் அந்தப் பண்டிதர்?' என்ற கேள்வி அறிவுலகத்தார் மத்தியில் பரவலாக எழுந்தது. அப்போதைய 'தினக்குரல்' பத்திரிகையின் ஆசிரியராய் இருந்த சிவனேசச்செல்வன் அவர்கள்தான் இக் கட்டுரைகளை எழுதி வருவதாய் பலரும் நம்பிக்கொண்டிருந்தார்கள்.

***

இத்தகைய நிலையில்தான் புகழ்பெற்ற மறைந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களுக்கு ஓர் கடிதத்தினை பண்டிதரின் பெயரால் எழுதவேண்டிய ஓர் தேவை ஏற்பட்டது. 'அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலியவற்றை ஆண்கள்தான் பெண்களிடம் புகுத்தினர்' என, ஒரு பெண்கள் அமைப்புக் கூட்டத்தில் பேராசிரியர் பேசியமையை மறுத்து அக் கடிதத்தை எழுதியிருந்தேன். அக் கடிதத்தில் பேராசிரியரின் ஆற்றலை அங்கீகரித்து எழுதியபின், அவரின் முன்னுக்குப் பின் முரணான பல செயல்களையும் கண்டித்து அவரைக் கடுமையாகச் சாடியிருந்தேன்.

***

பேராசிரியர் சிவத்தம்பி புகழின் உச்சியில் இருந்த காலமது. அவருடனான தொடர்புதங்களையும் அறிவுலகப் பிரதிநிதியாய்க் காட்டும் என்பதால், பல 'வெற்று மனிதர்கள்' அவரை வழிமொழியும் 'ஆமாம் சாமிகளாய்' வலம் வந்து கொண்டிருந்தனர். 'தினக்குரல்' பத்திரிகையின் ஆலோசகர்களில் ஒருவராயும் அப்போது சிவத்தம்பியும் இருந்தார். அத் தொடர்பாலும், ஒரே ஊர்க்காரரர் என்பதாலும் உறவு உண்டாக்கி, முன் சொன்ன 'ஆமாம் சாமி' கூட்டத்தில் ஒருவராய் 'தினக்குரல்' தனபாலசிங்கமும் இருந்து வந்தார்.

***

அதனால் அவருக்கு, சிவத்தம்பிக்கு நான் எழுதிய கடிதம் பிடிக்கவில்லை. வாராவாரம் தொலைபேசியில் கேட்டுஎன் கட்டுரையை வாங்கி அந்தந்த வாரமே அதனை வெளியிடும் வழக்கத்தைக் கொண்டிருந்த தனபாலசிங்கம் அவர்கள், அந்த வாரம் நான் எழுதிய சிவத்தம்பி பற்றிய கட்டுரையை வெளியிடவில்லை. அதற்கு அவர் அப்போது ஏதோ 'சளாப்புச்' சொன்னதாய் ஞாபகம். அதுபற்றி நான் கவலைப்படவில்லை. தமது பத்திரிகையில் எது வரலாம் எனத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஓர் பத்திரிகை ஆசிரியருக்கு உண்டு என நினைந்து, அக் கடிதத்தை ஏன் வெளியிடவில்லை? எனக் கேட்காமலே தொடர்ந்து எழுதி வந்தேன்.

***

இது நடந்து இரண்டு வாரங்களின் பின்னர், திடீரென ஒருநாள் தனபாலசிங்கம் அவர்கள் என்னோடு தொடர்பு கொண்டு, 'இந்த வாரம் சிவத்தம்பிக்கு நீங்கள் எழுதிய கடிதத்தினை வெளியிடலாம் என்று நினைக்கிறேன்' என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. முன்பு வெளியிட மறுத்த கடிதத்தை, இப்போது ஏன் இவர் வெளியிடக் கேட்கிறார்? எனக் குழம்பினேன். சிந்தித்த போது ஓர் உண்மை புலனாயிற்று. நான் சிவத்தம்பிக்கு எழுதிய கடிதத்தை குறித்த அந்த வாரத்தில் வெளியிடாது, அக் கடிதத்தைக் கொண்டுபோய் சிவத்தம்பியிடம் ஒப்படைத்து, அதற்கு பதில் எழுத இரண்டு வாரம் அவருக்கு அவகாசம் கொடுத்து, அவர் பதில் எழுதியபின் எனது கடிதத்தை வெளியிட இவர் முன்வருகிறார் எனும் உண்மையைத் தெரிந்து கொண்டேன். என்னே! தனபாலசிங்கத்தின் பத்திரிகா.கா.கா.தர்மம்?

***

அதனால் அவரிடம், பத்திரிகையில் வந்த ஒரு செய்தி தொடர்பாகத்தான் குறித்த அந்த வாரத்தில் சிவத்தம்பிக்கு அக் கடிதத்தினை நான் எழுதினேன், அச் செய்தி வந்து இப்போது மூன்று, நான்கு வாரங்கள் ஆகின்றன. போடுவதாய் இருந்தால், அச் செய்தி வந்த கையோடு எனது கடிதத்தைப் போட்டிருக்கவேண்டும். பத்திரிகைச் செய்தி மறக்கப்பட்ட இன்றைய நிலையில் அக் கடிதத்தை வெளியிடுவது பொருத்தமாய் இராது. எனவே அக் கடிதத்தை வெளியிட வேண்டாம்! இம்முறை நான் வேறு எழுதித் தருகிறேன் என்றேன்.

***

அவரோ, தான் செய்த வஞ்சனை விளையாட்டை மறைத்து, எனது கட்டுரையைப் புகழ்ந்து எனக்கு 'வால்முறுக்கி' அவ்வாரத்தில் அக் கட்டுரையை வெளியிட மீண்டும் அனுமதி கேட்டார். அவரது 'பசப்பு' வார்த்தைகளுக்கு மயங்காமல், அக் கட்டுரையை வெளியிடவேண்டாம்! என உறுதியாய்ப் பதில் உரைத்தேன். நான் கட்டுரையைப்போடவேண்டாம்என்றுசொல்ல, தனபாலசிங்கம் அவர்களின் பாடு சங்கடமாயிற்று.

***

நான் கட்டுரையைப் போடவேண்டாம்! என்று சொல்ல, வலிந்து கேட்டு எழுதுவித்த கட்டுரையை ஏன் போடவில்லை? என்று சிவத்தம்பி கேட்க, தனபாலசிங்கத்தின் நிலை திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையாயிற்று. இந் நிலையில் சிவத்தம்பியின் பிரபல்யத்தை மனங்கொண்டு, அவரை மகிழ்விக்க எண்ணி, எனக்கு எதுவும் செய்யலாம் எனும் அலட்சியத்தோடு, போடமாட்டேன் என்று சொல்லிவிட்டு, அக் கட்டுரையை என் உடன்பாடில்லாமலேயே அவ்வாரத்தில் தனபாலசிங்கம் வெளியிட்டார்.

***

இதற்கிடையில், 'அக்கட்டுரையைப் பிரசுரிக்க மாட்டேன்' என்று தனபாலசிங்கம் வாக்களித்ததில் எனக்கு ஏதோ ஒரு ஐயப்பாடு தோன்ற, நான் நிர்வாக இயக்குநர் எஸ்.பி.சாமி அவர்களுடன் தொடர்பு கொண்டு நடந்த விடயங்களைச் சொல்லி, 'தனபாலசிங்கம் சிவத்தம்பியைத் திருப்திப்படுத்த நினைக்கிறார்போல, காலதாமதமானதால் எனது அக்கடிதத்தைப் பிரசுரிக்க வேண்டாம் என நான் சொல்லியிருக்கிறேன்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# சீன அரிசியில் மனிதாபிமானம் இல்லை வல்லாதிக்க போட்டி அரசியலே அதிகம்

## பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு







யாழ்ப்பாணம், டிசெ. 31

கடந்த சில நாள்களாகச் சீன அரிசி பற்றி அதிகம் பேசப்படுகிறது. சமைத்த பலர் சாப்பிட முடியாதவாறு குழைந்துபோய் இருப்பதாகக் குறைப்பட்டுக்கொள்கிறார்கள். இது சீனர்களின் உணவுப் பண்பாட்டில் இடம் பிடித்துள்ள பசைத் தன்மைகூடிய ஸ்ரிக்கி றைஸ் (sticky rice) ஆகும்.

தமிழ் மக்களின் உணவுப் பண்பாட்டில் கடலட்டை எவ்வாறு இல்லையோ, அதேபோன்றே இந்த ரக அரிசியும் இல்லை. சீனா மனிதாபிமான நோக்கில் அரிசியை வழங்கியிருந்தால் எங்களது பயன்பாட்டிலுள்ள அரிசியைத் தெரிவு செய்து வழங்கியிருக்கும். ஆனால், இந்தச் சீன அரிசியில் மனிதாபிமானம் இல்லை வல்லாதிக்கப் போட்டி அரசியலே அதிகமாகவுள்ளது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ‘அற்றார் அழிபசி தீர்த்தல்’ என்ற திட்டத்தின்கீழ் பொருளாதார ரீதியாக நலிவுற்றிருக்கும் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வருகிறது. கடந்த வியாழக்கிழமை பல்வேறு பகுதிகளில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்ச்சி திருநெல்வேலியில் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் உரையாற்றும்போதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

பொருளாதார நெருக்கடியால் முழு இலங்கையிலும் உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது. அதிலும் ஏற்கனவே யுத்தத்தாலும் கொரோனாவாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உணவுப் பற்றாக்குறையால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பட்டினியால் குடும்பங்கள் படும் அவலத்தை சீனா சாதகமாகப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் மனதிலும் தமிழ் மண்ணிலும் வேரூன்றும் முயற்சியாகவே அரிசியை வழங்கி வருகிறது. பசியோடு இருக்கும் மக்களைச் சீன அரிசியை நிராகரிக்குமாறு எவருமே கோரமுடியாதபோதும் இந்த அரிசியிலுள்ள அரசியலை எமது மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி உடனடியாகத் தீரப்போவதில்லை. இதனாலேயே அரசாங்கம் பயன்படுத்தாமலுள்ள காணிகளை எடுத்து இராணுவத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளது. இது உணவு உற்பத்தி என்ற பெயரில் காணிகளை கையகப்படுத்தும் மறைமுக நோக்கத்தையும் கொண்டுள்ளது.

வடக்குக் கிழக்கில் உள்ள வெற்றுக் காணிகளில் எமது பொது அமைப்புகள் அல்லது தன்னார்வலர்கள் உணவு உற்பத்தியில் ஈடுபட முன்வரவேண்டும். பல வெற்றுக் காணிகளின் உரிமையாளர்கள் புலம்பெயர்ந்து வாழுகிறார்கள். குத்தகை அடிப்படையிலேனும் பயிர்ச் செய்கைக்கு காணிகளை வழங்க அவர்கள் முன்வர வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் பசியால் ஒரு சிறுவன் இறந்ததாகப் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. இது ஒட்டுமொத்த ஈழத்தமிழ்ச் சமூகத்துக்குமே இழுக்காகும். போர்க்காலத்தில் பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டிருந்த போதுகூட பட்டினியால் எவரும் இறந்ததில்லை. பிரதேச செயலகங்களில் கிராம சேவையாளர் பிரிவுரீதியாகப் பட்டினியை எதிர்நோக்கியுள்ள வறிய குடும்பங்களின் விவரங்கள் உள்ளன. திருவிழாக் காலங்களில் மட்டுமே அன்னதானங்கள் என்று இல்லாமல் இந்தக் குடும்பங்களின் சிலநாள் பசியையேனும் போக்க எமது ஆலயங்களும் முன்வரவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஹோமாகமவில் 15 வயது மாணவி உள்ளிட்ட 11 பேர் தற்கொலை!

## காரணங்களை விளக்கும் மரண விசாரணை அதிகாரி

ஹோமாகம மரண விசாரணை அதிகாரியின் அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 50 நாள்களில் 15 வயது பாடசாலை மாணவி உட்பட 11 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என ஹோமாகம மரண விசாரணை அதிகாரி சமாதான நீதிவான் சிந்தக உதயகுமார தெரிவித்துள்ளார்.

பனாகொட, ஹபரகட, நியதகல, பிடிபன, ஹிரிபிட்டிய, மீகொட, ஹங்வெல்ல மற்றும் ஹோமாகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார். இவர்கள் அனைவரும் 15 – 65 வயதுக்கு இடைப்பட்டவர்கள். அவர்களில் ஏழு பேர் மது மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களாவர்.

மேலும் பல மரணங்கள் மன உளைச்சல் மற்றும் மன அழுத்தத்தால் ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ள அவர், பதினைந்து வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்டமையுடன், காதல் உறவால் ஏற்பட்ட மன உளைச்சலே இந்தத் தற்கொலைக்குக் காரணம் என தெரிய வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி சிறுமியின் தாய் வெளிநாட்டில் இருக்கிறார் எனவும், தந்தை வேறு ஒருவரை திருமணம் செய்துள்ளார் எனவும் கூறப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# தனபாலசிங்கம் பொய்மையால் .......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அதற்குச் சம்மதம் சொன்னாலும் எனக்கு ஏதோ சந்தேகமாய் இருக்கிறது. அதனால் எனது சம்மதம் இல்லாமல் அக்கடிதத்தை வெளியிடக் கூடாதென நீங்களும் அவருக்கும் உத்தரவிடவேண்டும்’ எனக் கேட்டுக் கொண்டேன். அவரும் ‘உங்கள் அனுமதியில்லாமல் அவர் அக் கடிதத்தை ஒருநாளும் வெளியிடமாட்டார் அதற்கு நான் பொறுப்பு!’ என உறுதி தந்தார்.

***

ஆனால் என் மறுப்பை நிராகரித்து, எனக்குத் தந்த வாக்கை மீறி, தங்களது நிர்வாக இயக்குனரின் உத்தரவைப் பொருட்படுத்தாது எனது அனுமதியின்றியே தனபாலசிங்கம் அவ்வாரம் அக் கட்டுரையைத் தன்னிச்சையாக வெளியிட்டார். உங்களின் பத்திரிகையில் அவர் எனக்கு எழுதிய பதிலில், ‘பத்திரிகாதர்மம்’ பற்றி பலபட உரைத்திருக்கின்றார். மேற்சொன்ன இக்காரியத்தைச் செய்கிற பொழுது அந்த ‘தர்மம்’ பற்றி சிந்திக்காதது ஏனென்று அவர்தான் சொல்லவேண்டும்.

***

அவர் உங்களுக்கு எழுதிய தனது பதிலில், மேற்சொன்ன செய்திகளை எல்லாம் மறைத்து ஏதோ நான் கொடுத்ததும் உடன் அக் கடிதத்தை வெளியிட்டது போலவும், அடுத்த வாரமே சிவத்தம்பி அதற்குப் பதில் எழுதினது போலவும் பொய்மையாய் எழுதியிருக்கிறார். இடைநிகழ்ந்த பல விடயங்களையும் மறைத்து அவர் எழுதிய பதிலில் நேர்மையும் சத்தியமும் இல்லை.

***

கட்டுரை வெளிவருவதற்கு முதல் நாள் கூட அக் கட்டுரையை வெளியிடமாட்டேன்! என திரும்பத் திரும்பப் பொய் உரைத்துவிட்டு, அடுத்த நாளே என் கட்டுரையை என் உடன்பாடின்றி வெளியிட்ட அவரது செயலால் நான் கடுங்கோபமுற்றேன். உடனே நிர்வாக இயக்குனர் எஸ்.பி.சாமி அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். நிகழ்ந்ததைக் கேட்டு அவரும் அதிர்ந்து போனார். ’அக்கட்டுரையை வெளியிடமாட்டேன்!’ என முதல்நாள்தான் அவருக்கும் தனபாலசிங்கம் பொய் உரைத்திருக்கிறார் எனத் தெரியவந்தது.

***

அதனால் அவருமே சற்றுக் கோபப்பட்டு, ‘கொஞ்சம் இப்படியே இருங்கள் தம்பி, நான் அவரை இங்கே கூப்பிடுகிறேன்’ என்று கூறி, அவரைத் தன் மேசைக்கு அழைப்பித்தார். அவர் வந்ததும், என்னிடம் ‘இதோ அவருடனேயே நீங்கள் பேசுங்கள்’ என்று கூறி, தொலைபேசியை அவரிடம் கொடுத்தார். வன்சொற்களைப் பேசுவதில் விருப்பம் இல்லாதவன் நான். ஆனாலும் வள்ளுவரின் ‘நன்று ஆற்றலுள்ளும் தவறுண்டு அவரவர் பண்பறிந்து ஆற்றாக்கடை’ என்ற குறளினைக் கற்றிருப்பதால், தேவை ஏற்படுகிறபொழுது அத்தகைய வார்த்தைகளையும் பயன்படுத்த நான் தவறுவதில்லை. அன்றைக்குத் தனபாலசிங்கத்தைத் திட்டிப் பேசியது போன்ற வன்சொற்களை, என் வாழ்நாளில் நான் வேறெங்கும் பயன்படுத்தியிருக்கமாட்டேன். அவர் தனது பொய்மையால், என் வார்த்தைகளை எதிர்கொள்ள முடியாமல் தட்டுத் தடுமாறியமை இப்போதும் என் நினைவில் இருக்கிறது.

***

இப்போது நீங்களே சொல்லுங்கள். தனபாலசிங்கம் செய்தது நேர்மையான ஒரு பத்திரிகை ஆசிரியரின் செயலா? அவர் செய்த வஞ்சனைச் செயல்களை, ‘குள்ளத்தனம்’ என்ற வார்த்தையாலன்றி வேறெப்படிச் சொல்வது? குள்ளத்தனம் என்ற வார்த்தைக்கு ‘மதுரைத் தமிழ்ப் பேரகராதி’ குறுமை, கொடுமை, வஞ்சகம் என மூன்று அர்த்தங்களைத் தருகிறது. தனபாலசிங்கத்தின் மேற்செயலுக்கு இம் மூன்று அர்த்தங்களுமே பொருந்துகிறபடியால்தான் அவ் வார்த்தையால் அவரின் செயலைக் குறிப்பிட்டிருந்தேன். நான் நாகரீகம் கருதி குறிப்பால் சொன்ன விடயத்தை, தான் குற்றம் ஏதும் செய்யாதவர் போல் பதில் எழுதத் தலைப்பட்டு, இப்பொழுது அவரது முழுச்செயலையும் வெளிப்படையாகவே என்னைச் சொல்ல வைத்திருக்கிறார். தன் வினையே தன்னைச் சுட்டிருக்கிறது.

***

அதன் பின்னரும் நான் சாமி அவர்களின் சமாதானத்தை ஏற்று சிவத்தம்பியின் பதிலை தர்க்கத்திற்கு ஆளாக்காமல், மிக நாகரீகமான ஓர் பதிலை அவருக்கு எழுதினேன். அதுவும் ‘தினக்குரலில்’ வெளிவந்தது. தொடர்ந்தும் ஓரிரு கடிதங்களை எழுதினேன். முத்தையா முரளிதரன் அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தை வெளியிடும்போது, முன் வரவேண்டிய பந்தியைப் பின்னும் பின் வரவேண்டிய பந்தியை முன்னுமாக வெளியிட்டு, அக் கடிதத்தினை அலட்சியம் செய்தார். ‘இனி இவரோடு பொருந்தி நடக்க முடியாது’ என்பதைத் தெரிந்து கொண்டு அந்த வாரத்துடன் அக்கடிதத் தொடரை நிறுத்தினேன்.

***

அதன் பின்னும் தனபாலசிங்கத்தின் ‘குள்ளத்தனம்’ தொடர்ந்தது. நீண்ட காலமாகிவிட்டபடியால் குறித்த அந்த விடயம் பற்றி என்னால் தெளிவாக எழுத முடியவில்லை. மனதில் இருக்கும் எண்ணம் கொண்டு ஊகமாய்ச் சொல்கிறேன். என்னைப் பற்றி, வேண்டுமென்றே இழிவு செய்யும் முகமாக ஒரு பத்தியை தனபாலசிங்கம் மீண்டும் பிரசுரித்து தனது பகையைப் புதுப்பித்தார். அதனால் நானும் கழக உறுப்பினரும் கோபமுற்றோம். இதுபற்றி எஸ்.பி.சாமி அவர்களிடம் முறையிடுவதற்கா நேரே அவர் அலுவலகத்திற்குச் சென்று பேசினோம். அப்போதும் அவர் எங்கள் முன்னாலேயே தனபாலசிங்கத்தை அழைத்துப் பேசினார். என்னுடன் வந்த உறுப்பினர்கள் ஆத்திரப்பட, அப்போதும் தனபாலசிங்கம் தன் நேர்மையின்மையினால் உறுதிபடப் பதிலேதும் உரைக்காமல் எங்களுடன் ஏதோ சமரசத்திற்கு வருவதாய்க் காட்டிக் கொண்டார். அவர் வெளியிட்ட கட்டுரை இப்போது என் கைவசம் இல்லை. அதைத் தேடிக் கொண்டிருக்கிறேன். அது கிடைத்தால் இந்த விடயம் பற்றி என்னால் இன்னும் தெளிவாகப் பதில் உரைக்க முடியும்.

***

அதுகூடத் தேவையில்லை என்று தோன்றுகிறது. மேற் சொன்ன ஒரு சம்பவமே அவரின் நேர்மையற்ற உண்மை முகத்தை உங்களுக்கு உணர்த்தியிருக்கும். திரும்பத் திரும்ப அவரைக் குற்றம் சாட்டுவதில் எனக்கு விருப்பமில்லை. செத்த பாம்பைத் திரும்பத் திரும்ப அடிப்பதில் எனக்கு எப்போதும் உடன்பாடில்லை. வேண்டும் என்றே நான் பிழை செய்ய விரும்புவதில்லை. என்னை மீறிப் பிழை செய்தால், அதை ஒத்துக்கொண்டு மன்னிப்புக் கோருவதிலும் எனக்கு எவ்வித தயக்கமும் இல்லை. அவ்வளவே!

நன்றி.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஆனந்த பைரவிக்காக வாசித்த முகாரி ராகங்கள்

**அங்கம் - 228**

13 ஆம் திருத்தம், இரண்டு தேசங்களை ஏற்றுக் கொண்டதா?

13 ஆம் திருத்தம் தமிழர் தேசம், சிங்கள தேசம் என்பதைக் கூறவில்லை. கூறவும் தேவையில்லை என்பது எனது கருத்து. தேச உணர்வுகள் சட்ட அங்கீகாரத்தில் அமைய வேண்டும் என்பது இல்லை. நடைமுறைகளில்தான் இவை நோக்கப்படுகின்றன அங்கீகாரங்கள் பெறுகின்றன.

தேசம் என்பது ஒரு குழுமான மக்கள், தனித்துவமாக ஒரு மொழியை, கலாச்சாரத்தை, மேலும் அதனை ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழ்ந்து, தங்களைத் தான் தேசமாகக் கணிப்பதுதான்.

அந்தக் குழுமம் தாங்கள் தேசமாக வாழ வேண்டும் என்ற உணர்வை கொண்டிருக்க வேண்டும். அந்த வாழ்க்கை முறையை தமிழ் மக்கள் வாழ்ந்ததால்தான் அவர்களது பாரம்பரிய பிரதேசங்களுக்கு வெளியே வன்முறைகள் நடந்த பொழுது பாதிக்கப்பட்ட மக்கள் அந்தப் பிரதேசங்களுக்கு தங்களது குடும்ப மக்களின் பாதுகாப்பைத் தேடி வந்தார்கள். ஏன் மலையகத் தமிழர் கூட, 1977, 1983 வன்முறைகளில் அகப்பட்டபோது வடக்கு கிழக்கு பகுதிகளுக்குத்தான் குடி பெயர்ந்தார்கள்.

தமிழ் மக்கள், தனித்துவமான வடக்கு – கிழக்கு தேசத்தின் மக்கள் என கருதப்பட்டமையாள்தான் பண்டாரநாயக்கா – செல்வநாயகம் தொடக்கம் வரை மற்றைய இணக்கங்கள் எழுந்தன என்பது மட்டுமல்லாமல், நான் குறிப்பிட்டபடி 1972, 1978 இல் தங்களுடைய அரசமைப்புக்களை ஏற்படுத்தும் போது இந்த வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கும் தமிழ் மொழி அமலாக்கத்துக்குமான சரத்துக்கள் சேர்த்தார்கள்.

ஒரு நாட்டுக்குள் தேசங்கள் சேர்ந்து வாழலாம் என்பதை தமிழ் மக்கள் அறியாமல் இல்லை, முரண்பாடுகளும் பிரச்சினைகளும் தமிழ் தேசமும் சிங்கள தாயகமும் என்ற அடிப்படையில் சேர்ந்து வாழலாம் என்பதே 1956 லிருந்து சமஸ்டி கோரப்பட்டது. ஆனால் சிங்கள பேரினவாதம் தங்களது அரசியலுக்காக சமஷ்டிக் கோரிக்கையை பிரிவினையாக பிரச்சாரங்கள் செய்து, தொடர்ச்சியான வன்முறைகளும் அடக்குமுறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன.



"உன்னுடைய எதிரிதான் உன்னுடைய போராட்டப் பாதையைத் தீர்மானிப்பான்" – என நெல்சன் மண்டேலா கூறுவார்.

ஆதலால் தமிழ் மக்கள் தங்களது பந்தத்தை முறித்துக் கொண்டு வெளியேறத் தீர்மானித்தனர். தங்களது இறைமையை சுயநிர்ணய உரிமையில் கோரினர்.

அந்தக் கோம் தனி நாடாக இருந்தது. தமிழ் மக்களின் அரசியல் பரப்புகள் தேசத்தை, சுயாதீன நாடு என்ற அர்த்தங்களில் பிரச்சார படுத்தியதால் அவை இரண்டும் ஒத்த கருத்துக்களில் பாவிக்கப்படுவதை முன்னர் குறிப்பிட்டு இருந்தேன்.

'வட்டுக்கோட்டை தீர்மானம் இருந்த போதும் பிராந்திய குடும்பத்தின் தலைவனாக இந்தியா அதனை ஏற்கவில்லை. தனது மேற்பார்வையில் நடைபெறக் கூடியதான இடைக்கால ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, அங்கிருந்து இரண்டு தேசங்களும் எவ்வாறு உறவுகளை மேற்கொள் ளலாம் எனக் கணக்கிடப்பட்டது.





நம்பிக்கையை முரண்பட்டவர்கள் யாவரிடமும் எதிர்பார்த்தது.

ஜே.ஆர். ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் காலங்களில், தான் அரசமைப்பின் பிரகாரம் சர்வ வல்லமை கொண்ட நிறைவேற்று அதிகாரங்கள் மிக்க ஜனாதிபதியாக தன்னைப் பறைசாற்றினார்.! அதன் பிரகாரம் தனது மந்திரி சபையினதோ, நாடாளுமன்றத்தினதோ அங்கீகாரம் இல்லாததுதான் இந்தியா ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். தனது பாதுகாப்பு ஆலோசகராக இருந்த தனது மகன் ரவி ஜெயவர்தனாவிற்கு ஒப்பந்தம் பற்றி பேசாது, இந்தியப் படைகள் நாட்டிற்கு வரும் என்பதை கூட ரவிக்கும் தெரிவிக்காதவர், ஒப்பந்தம் கையெழுத்திட்ட சமயங்களில் அரசிலிருந்து எழுந்த எதிர்ப்புகள், பேராண்மைகளின் போராட்டங்கள், ஜே.வி.பியின் வன்முறை போன்றவற்றை சமாளிக்க அவர் எடுத்த நயவஞ்சக யுக்திகள் தான் 13 ஆம் திருத்தத்தின் ஏற்பாடுகளும், வடக்கு கிழக்கு இணைப்பைக் காலக்கெடு வைத்து, அந்த இணைப்புக்கு எதிராக தான் வாக்கெடுப்பின் பிரகாரம் செய்வேன், கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கும், ஆகவே வாக்கெடுப்பு தங்களுக்கு சாதகமாக அமையும் என தனது கட்சி குழுக்களுக்கு 'போட்டோ' காட்டியது எல்லாம்.

வாக்கெடுப்பு நடத்தப் போவதில்லை என ராஜீவுக்கு கொடுத்த வாக்குறுதியை அவர் அவர்களுடன் பேசவில்லை. அதே போல குமரப்பா, புலேந்திரன் பிடிபட்ட போது, அவர்களை விடுவிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளில் தன்னை அந்நியப்படுத்தி, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி இணக்கம் தரவில்லை எனக் கைகழுவினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, விடுதலைப் புலிகள் ஆகிய இரு பகுதியினருமே இந்தியாவில( ராஜீவில்) நம்பிக்கை கொண்டிருந்தனர். அந்த நம்பிக்கை இதய சுத்தியானதாக இல்லாது இருந்தால் சுதுமலை பேச்சு அவநம்பிக்கைகளோடும் சந்தேகங்களோடும் பேசப்பட்டதாகத் தான் இருக்கும்.

பந்தம் எழுந்து, மாலைகள் போட்டுத் தான் மக்கள் இந்திய படையினரை வரவேற்றார்கள்.

திருமண பந்த காலங்களில் – முக்கியமாக தாலி கட்டும்போது – ஆனந்த பைரவி ராகம் தான் வாசிப்பார்கள். அந்த ராகத்தை கேட்டு மக்கள் கவலைகளை மறந்து, இருங்கள், ஆனால் சில நாள்களிலேயே எழுந்த முகாரி ராகங்கள் கவலைகளை மக்களுக்கு அனுப்ப, தாரை தப்பட்டைகளும் கொம்புகளும் வாசிக்கப்பட்டு, வலிகளையும் உணர்வுகளையும் கிளப்பி, போருக்கான முன்னெடுப்புகள் எழுந்தன.

அன்றிலிருந்து இன்று வரை பேச்சு காலங்களை தவிர, தமிழ் மக்கள் இன்ப ராகங்களை கேட்டது குறைவு.

இந்திய அனுசரணையும் அவர்களது நல்லெண்ணமும் தமிழ் மக்களுக்காக என்றிருந்த போது, புத்திசாதுரியத்துடன் நடைமுறைக்கான காலங்களைத் தந்து, ராஜ தந்திரங்களை இந்தியாவோடு இணைத்து நடத்தி, ஜே.ஆரின் நயவஞ்சகங்களையும் தந்திரங்களையும் நீர்த்துப்போகச் செய்யும் கட்டமைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். இன்றைய சூழ்நிலைகளில் இவையெல்லாம் wishful thinking.

(வளரும்...)

## யாழ் நகர மேயர் மணி

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தை 2022-12-21 அன்று முதல் தடவை சபையில் தாக்கல் செய்த நிலையில் ஆதரவாக 11 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். எதிராக 18 வாக்குகள் அளிக்கப்பட்டது. இதனடிப்படையில் இரண்டாவது தடவை வரவு செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பித்தாலும் வரவு - செலவுத் திட்டம் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பம் காணப்படாத நிலையில் முதல்வர் தனது பதவியை நேற்றைய தினம் இராஜினாமாச் செய்துள்ளார்.

## மதமாற்ற கொள்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்றிலில் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது,

## ஹிருணிகா தரப்பிடம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசு மாரசிங்க வக்கீல் நோட்டீஸ் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நாய் குட்டியொன்றை பாலியல் ரீதியில் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என ஆசு மாரசிங்க மீது, ஹிருணிகா பிரேமசந்திர மற்றும் ஆசு மாரசிங்கவுடன் உறவுகளை பேணியவர் எனக் கூறப்படும் ஆதர்ஷா கரதனா ஆகியோர் குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருந்தனர்.

குறித்த இருவரும் ஊடக சந்திப்பில் காண்பித்த வீடியோ மற்றும் படங்கள், போலியாக தயாரிக்கப்பட்டவை எனவும் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

தன்மீது தேவையற்ற எண்ணமொன்றை மக்களுக்கு ஏற்படுத்தவும், மக்களைத் தவறாக வழிக்கு கொண்டு செல்லும் வகையிலும் இந்த இருவரும் செயற்பட்டுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஹிருணிகா பிரேமசந்திரவிடம் ஐம்பது கோடி ரூபாவும், ஆதர்ஷா கரதனாவிடம் நூறு கோடி ரூபாவும் நட்டஈடாக கோரியுள்ளார்.

## இன்றும் நாளையும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

பகலில் ஒரு மணி நேரமும், இரவில் ஒரு மணித்தியாலமும் 20 நிமிடமும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என ஆணைக்குழு மேலும் தெரிவிதத்துள்ளது.

## தாயாரின் பூதவுடலைத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவு வண்டி வரை பாதணி ஏதும் அணியாமல் வெறுங்காலுடன் தாமும் சேர்ந்து சுமந்து சென்றார் பிரதமர் மோடி.

அவரே தாயின் சிதைக்கு தீயையும் மூட்டினார்.

## கடலட்டைப் பண்ணை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் நூற்றுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கலந்து கொண்ட இந்தப் பேரணி பண்ணை கடற்கரையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தை சென்றடைந்து, அங்கிருந்து ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அலுவலகத்தை அடைந்தது.

பேரணியின் நிறைவில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கான மகஜர் கடற்றொழில் அமைச்சரின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் பல்வேறு தொழில் முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், தற்போதைய நிலையில், பொருளாதார சுமைகளை எதிர்கொள்ளுமளவிற்கு போதுமானளவு வருமானத்தினை பெறமுடியாத நிலையில் நல்ல வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய கடலட்டைப் பண்ணை தங்களுக்கு வேண்டுமென வலியுறுத்தியே கடற்றொழிலாளர்களால் போராட்டம் இடம்பெற்றது.

பேரணியில் கலந்து கொண்டோர் கடலட்டை பண்ணை தொடர்பாக முன்வைக்கப்படும் விமர்சனங்கள் தொடர்பாகவும் கண்டனத்தினை வெளிப்படுத்தினர்.





## 1 லட்சத்து 60 ஆயிரம் கிலோ சீன அரிசி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின் பசியை போக்கும் முகமாக சீன அரசாங்கத்தால் ஒரு மாணவனுக்கு 10 கிலோ வீதம் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த அரிசி வடமாகாணத்தில் வடமாகான கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மேற்பார்வையின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு 4 இலட்சத்து 15,450 கிலோ அரிசியும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஒரு இலசத்து 13,720 கிலோ அரிசியும், மன்னார் மாவட்டத்திற்கு ஒரு இலட்சத்து 7,160 கிலோ அரிசியும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஒரு இலட்சத்து 5,370 கிலோ அரிசியும், வவுனியா மாவட்டத்திற்கு ஒரு இலட்சத்து 62,570 கிலோ அரியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் வவுனியா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் அந்த அரிசி அந்தந்த மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மாணவர்களுக்கு விநியோகிப்பட்டு இறுதி கட்டத்தை அடைந்துள்ள நிலையில், வவுனியா மாவட்டத்தில் குறித்த அரிசி இன்னும் விநியோகிக்கப்படவில்லை.

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஓமந்தையில் உள்ள களஞ்சியசாலையில் குறித்த அரிசியில் ஒரு இலட்சத்து 58,900 கிலோ கொண்டு வரப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டு ஒரு மாதம் நெருங்கும் நிலையில் அந்த அரிசி மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை.

புது வருடத்திற்கு கூட அந்த அரிசி கிடைக்கவில்லை எனவும், அவை களஞ்சியப்படுத்தி நீண்டகாலம் வைத்திருந்தால் பழுதடைந்து விடும் எனவும் பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பெற்றோர் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் சு.ஜெகசோதிநாதன் அவர்களிடம் கேட்ட போது-

மாணவர்களுக்கான அரிசி விநியோகம் வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. எமது மாவட்டத்தில் அதனை வழங்குமாறு எம்மிடம் தெரிவித்துள்ளனர். வவுனியா மாவட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்கான அரிசி எமது சங்கத்தின் ஓமந்தை களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த அரிசி விநியோகத்திற்கான மாணவர்களது பெயர் பட்டியில் வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் இருந்து பாடசாலை விடுமுறை விடுவதற்கு முதல் நாளே எமக்கு கிடைத்தமையால் எம்மால் வழங்க முடியவில்லை. பாடசாலை ஆரம்பித்ததும் அதனை வழங்குவோம் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் வடமாகாண பலநோக்கு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் தலைவர் இ.அ.ஆனந்தராஜா அவர்களிடம் கேட்ட போது -

வடக்கில் கொண்டுவரப்பட்ட அரிசியில் ஏனைய மாவட்டங்களில் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றது. வவுனியாவில் இதுவரை விநியோகிக்கவில்லை. எமக்கு பெயர் பட்டியல் முன்னரே கிடைத்திருந்தது. ஆனாலும் சீரற்ற காலநிலை காரணமாகவும், போக்குவரத்து பிரச்சினை காரணமாகவும் பாடசாலை ரீதியாக கொண்டு சென்று உடனடியாக வழங்க முடியவில்லை. அதற்கான ஏற்பாடுகளை சீர்செய்த போது பாடசாலை விடுமுறை விட்டுள்ளது. அதனால் எதிர் வரும் 2 ஆம் திகதி முதல் வவுனியாவில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஊடாக பாடசாலை ரீதியாக விநியோகம் இடம் பெறும். - எனத் தெரிவித்தார்.

## இன்றும் நாளையும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி திகதியிடப்பட்டு, இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைக்கும், புதுச்சேரிக்கும் இடையில் ஜனவரி மாதம், பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையிலேயே காங்கேசன் துறை துறைமுகம், உள்வருகை மற்றும் வெளியேறலுக்கு அனுமதியுடைய துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழ் அரசியல் வாதிகளும் புலம்பெயர் ஈழத்தமிழர்களும் அரசின் செயற்பாடுகளை நிதானமாக நோக்கவேண்டும்!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பின் பிரமுகர் கோமகள் கோரிக்கை

மிகநீண்ட காலங்களாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 32 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் சார்பில் ஆளுக்கொரு கருத்தை நாளுக்கொரு வகையில் தெரிவித்து வருகிறார்கள். இது, தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் உறவினர்கள் மற்றும் மக்கள் மத்தியில் நல்லிணக்கம் தொடர்பான சந்தேகத்தையும் கேள்வியையும் எழுப்பியுள்ளது.

அந்தவகையில், அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று பேச்சுக்கான கலந்துரையாடலில் பங்கேற்கும் தமிழ்கட்சிகளின் பிரதிநிதிகளும் நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு அடித்தளமிடுகின்ற புலம்பெயர் மக்கள் அல்லது அமைப்புக்களும் தமிழ்மக்கள் நலன் சார்ந்து வெகுநிதானமாகச் செயற்பட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு குரலற்றவர்களின் குரல் அமைப்பின்பிரமுகர்கோமகள்கோரிக்கை விடுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் கட்சித் தலைவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

13-12-2022 அன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கலந்துரையாடவில், தமிழ்ப் பிரதிநிதிகளுடனான பேச்சுக்கு முன்னதாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளினுடைய விடுதலை உறுதி செய்யப்படுமென ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அதற்கு, ஏனைய சிங்களத் தலைவர்கள் எவரும் ஆட்சேபனைகளையோ எதிர்ப்புகளையோ வெளியிட்டிருக்கவில்லை. மாறாக, சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் கூட ஆதரித்திருந்தார்கள்.

இவ்வாறிருக்கையில், 21-12-2022 அன்று, ஜனாதிபதிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் திடீரென ஒரு கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது. இதில், நீதியமைச்சர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரும் பங்கேற் றிருந்தனர். அதன்போது, அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் முற் றிலும் மாறுபட்ட நிலைப்பாடுடைய கருத்துக்களே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.அதாவது, 'விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ள 16 பேரின் வழக்குகள் துரிதப்படுத்தப்படும்' என்ற பழைய புராணத்தையே மீண்டும் கையிலெடுத்துள்ள நீதி அமைச்சர், தண்டனை அனுபவித்து வருகின்ற 13 பேர் தொடர்பில் தீர்மானமான முடிவெத னையும் தெரிவிக்கவில்லை.

மொத்தக் கைதிகளின் விடுதலையை எதிர்வருகின்ற சுதந்திர தினத்துக்குள்ளாவது சாத்தியமாக்கும் எண்ணம் வெளிப்படுத்தப்படவில்லை. அதுமாத்திரமன்றி 'வெடிப்புச் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட தரப்புக்களது ஒப்புதலை பெற்றுக் கொண்டே அரசியல்கைதிகளது விடுதலையைத் தீர்மானிக்க முடியும்' என்கின்ற நீதிஅமைச்சரின் கூற்று எந்தவகையிலும் அனைத்துக் கைதிகளுக்கும் ஏற்புடையதாகப் போவதில்லை. முற்பட்டகாலங்களில் ஜனாதிபதிப் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்ட, குற்றவியல் வழக்குக்களில்மரணதண்டனை, ஆயுள்தண்டனை அனுபவித்து வந்திருந்த சிவில் கைதிகள் விடயத்தில் இதுபோன்று பின்பற்றப்படவில்லை. புதிய விதிமுறைகள் எவையும் பின்பற்றப்படவில்லை.

வழக்குகளுடன் தொடர்புபட்ட சம்பவங்களை பிரசாரப்பாணியில் பொது வெளிப்படுத்தி வரும் நீதிஅமைச்சர், இந்தச் சம்பவங்களுடன் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் நேர்மையான வகிபாகம் என்ன என்பதையோ சம்பவங்களுக்கு கட்டளை பிறப்பித்தவர்கள் யார் அவர்கள் எங்கே என்பதையோ அரசியல் கைதிகள் தமது சுயவிருப்பின் அடிப்படையில் சொந்தத் தேவைக்காகவா சம்பந்தப்பட்டார்கள் என்பதையோ மிகமோசமான பயங்கரவாதத் தடைச் சட்டவிதிகளின் கீழ் 13 முதல் 27 ஆண்டுகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என் பதையோ கொஞ்சமாவது சிந்தித்துப் பார்க்கத் தயங்குவதானது கவலை தரும் விடயமாகும்.

நாட்டில் சட்டமும் நீதியும் மக்களுக்காகவே அமுல்படுத்தப்படுகிறது என்ற அடிப்படையில், தமிழ் அரசியல் கைதிகள் குற்றமிழைத்தவர்களாகக் காணப்படுவார்களாயின் அவர்கள் மீளவும் சமூகத்துடன் சேர்ந்து வாழ்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தையேனும் வழங்கவேண்டும் அல்லவா! அதைத் தவிர்த்து வஞ்சிக்கும் மனப்பாங்குடனோ அரசியல் ஆதாயங்களுக்காகவோ அரசியல் கைதிகளைப் பகடைக் காய்களாகப் பாவித்து தொடர்ந்து சிறைக்குள் அடைத்து வைத்து சிதைத்தழிப்பதால் நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட்டுவிடுமா?

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி அரசியல் தீர்மானம் ஒன்றை எடுப்பார் என எதிர்பார்த்திருந்த நிலையில் அவர், நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மீது பந்தைத் திருப்பிவிட்டு நல்லிணக்கக் கலந்துரையாடலுக்கு தமிழ்ப் பிரதிநிதிகளை அழைத்து அமர்த்திப் பேசுவது ஏற்புடையதா?

குறைந்த பட்சம், எவ்வித எதிர்பார்ப்புக்களோ தடைகளோ இன்றி உடனடியாகவே நடைமுறைப்படுத்தக் கூடிய அரசியல் – கைதிகளது விடுதலை விடயத்தில் கூட நழுவல் போக்கை கடைப்பிடிக்கின்ற ஆட்சியாளர்கள், வேறெதனைப் பேசித் தீர்க்கப் போகிறார்கள்?

எனவே, பாரிய பொருளாதார அரசியல் நெருக்கடியில் சிக்கியிருக்கும் அரசு, அதிலிருந்து தன்னை மீட்டெடுத்துக் கொள்வதற்கு உதட்டளவில் உச்சரிக்கப்படும் நல்லிணக்கப் பொறிக்குள் தடுமாறி வீழ்ந்து மீண்டும் மீண்டும் ஏமாற வேண்டுமா எனத் தமிழ்ப் பிரதிநிதிகள் நன்றாகச் சிந்தித்துச் செயலாற்றும் தருணமிது. ஆகவே, தமிழ் பிரதிநிதிகளும் புலம்பெயர் மக்களும் அரசுடனான இணக்கப் பேச்சுக்களில் தொடர்ந்து ஈடுபடுவதாயின் 32 தமிழ் அரசியல் கைதிகளையும் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் விடுதலை செய்யவேண்டும் என்பதை ஒருமித்த கருத்தாக முன்வைக்க வேண்டுமென, தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். – என்றார்.

# வவுனியா மாணவர்களுக்கு சீன அரசு வழங்கிய அரிசி உரியவர்களுக்கு கிடைக்கவில்லையாம்!

சீன அரசாங்கத்தால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு லட்சத்து 58 ஆயிரத்து 900 கிலோ அரிசி வவுனியாவில் நீண்ட நாளாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள போதும் இதுவரை விநியோகிக்கப்படவில்லை என பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து பாடசாலை செல்லும் தரம் 5 இற்கு உட்பட்ட மாணவர்களின் பசியைப் போக்கும் முகமாக சீன அரசாங்கத்தால் ஒரு மாணவருக்கு 10 கிலோ வீதம் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரிசி வடமாகாணத்தில் வடமாகான கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மேற்பார்வையின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட் டத்திற்கு 4 லட்சத்து 15 ஆயிரத்து 450 கிலோ அரிசியும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 720 கிலோ அரிசியும், மன்னார் மாவட்டத்துக்கு ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 160 கிலோ அரிசியும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒரு லசத்து 5 ஆயிரத்து 370 கிலோ அரிசியும், வவுனியா மாவட்டத் துக்கு ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 570 கிலோ அரியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் வவுனியா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் குறித்த அரிசி அந்தந்த மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மாணவர்களுக்கு விநியோகிப்பட்டு இறுதி கட்டத்தை அடைந்துள்ள நிலையில், வவுனியா மாவட்டத்தில் அரிசி இன்னும் விநியோகிக்கப்படவில்லை.

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஓமந்தையில் உள்ள களஞ்சியசாலையில் அரிசியில் ஒரு லட்சத்து 58 ஆயிரத்து 900 கிலோ கொண்டு வரப்பட்டு களஞ்சியப் படுத்தப்பட்டு ஒரு மாதம் நெருக்கும் நிலையில் அந்த அரிசி மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. புது வருடத்துக்குக்கூட அரிசி கிடைக்கவில்லை எனவும், அவை களஞ்சியப்படுத்தி நீண்டகாலம் வைத்திருந்தால் பழுதடைந்து விடும் எனவும் பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பில் பலநோக்கு கூட்டுறவுச் சங் கத்தினர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பெற்றோர் கோரியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் சு.ஜெகசோதிநாதனிடம் கேட்ட போது –

மாணவர்களுக்கான அரிசி விநியோகம் வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. எமது மாவட் டத்தில் அதனை வழங்குமாறு எம்மிடம் தெரிவித்துள்ளனர். வவுனியா மாவட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்கான அரிசி எமது சங்கத்தின் ஓமந்தை களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி அரிசி விநியோகத்துக்கான மாணவர்களது பெயர் பட்டியில் வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் இருந்து பாட சாலை விடுமுறை விடுவதற்கு முதல் நாளே எமக்கு கிடைத்தமையால் எம்மால் வழங்க முடியவில்லை. பாடசாலை ஆரம்பித்ததும் அதனை வழங்குவோம் எனத் தெரிவித்தார். இது தொடர்பில் வடமாகாண பலநோக்கு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் தலைவர் இ.அ.ஆனந்தராஜாவிடம் கேட்ட போது – வடக்கில் கொண்டு வரப்பட்ட அரிசி ஏனைய மாவட்டங்களில் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றது. வவுனியாவில் இதுவரை விநியோகிக்கவில்லை. எமக்கு பெயர் பட்டியல் முன்னரே கிடைத்திருந்தது. ஆனாலும் சீரற்ற காலநிலை காரணமாகவும், போக்குவரத்து பிரச்சினை காரணமாகவும் பாடசாலை ரீதி யாக கொண்டு சென்று உடனடியாக வழங்க முடியவில்லை. அதற்கான ஏற்பாடுகளைச் சீர்செய்த போது பாடசாலை விடுமுறை விட்டுள்ளது. அதனால் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் வவுனியாவில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஊடாக பாடசாலை ரீதியாக விநியோகம் இடம்பெறும் எனத் தெரிவித்தார்.

# அனைவரும் செலவுகளை குறைக்கவேண்டும் அல்லது வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டும்!

## புதிய வரிகள் தொடர்பாகப் பாரிய நிறுவனங்களை சேர்ந்தவர்கள் தெரிவிப்பு

ஜனவரியில் நடைமுறைக்கு வரவுள்ள புதிய வரிகள் காரணமாக இலங்கையின் பாரிய நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் செலவுகளைக் குறைப்பதற்கும் அல்லது வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதற்கும் சிந்திக்கின்றனர் என எக்கனமி நெக்ஸ்ட் தெரிவித்துள்ளது.

கடும் வருமான வரிகள் ஜனவரி முதல் நடைமுறைக்கு வரவுள்ளதால் இலங்கையின் பாரிய நிறுவனங்களைச் சேர்ந்த மில்லியன் கணக்கானவர்கள் செலவுகளையும் முதலீடுகளையும் குறைக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

இலங்கை அரசாங்கம் வங்குரோத்து நிலையை அறிவித்து பத்துமாதங்களுக்குப் பின்னர் புதிய வரிகள் நடைமுறைக்கு வரவுள்ளன.எனினும் புதிய வரிகள் வருமானம் உழைப்பவர்களின் நுகர்வுதிறன் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றன, குறிப்பாக ஏற்கனவே கடன்பட்டவர்கள் வீடுகளுக்காக வங்கிகளில் கடன் பட்டவர்கள், நுண்கடன்களைர் பெற்றவர்கள் அதிகளவு பாதிப்பை எதிர்கொள்ளவுள்ளனர்.

மாதாந்தம் 150,00 ரூபாவை உழைக்கும் இலங்கையர் ஒருவர் தனது வருமானத்தில் 2.3 வீதத்தைச் செலுத்தவேண்டும். ஆனால் ஒரு மில்லியன் உழைப்பவர் 28.7 வீதத்தைச் செலுத்தவேண்டும்.

எப்படி செலவுகளை குறைப்பது என தெரியவில்லை என்கின்றார் வங்கி துறையை சேர்ந்த 52 வயது நபர்.

இவர் ஏற்கனவே தனது வாகனங்களுக்கான லீசிங் மற்றும் வீட்டு கடன் போன்றவற்றை செலுத்தவேண்டிய நிலையில் காணப்படுகின்றார்.

நான் இரு கடன்களையும் பெற்ற வேளை வட்டிவீதம் குறைவாகக் காணப்பட்டது என்னால் மாதம் ஒரு லட்சம் ரூபாவை சேமிக்க முடிந்தது எனத் தெரிவித்த அவர், தற்போது பணவீக்கம் எரிபொருள் விலை அதிகரிப்பு போன்றவற்றால் எதனையும் சேமிக்க முடியாத நிலையில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நான் மலிவான பொருள்களுக்கு மாறிவிட்டேன் என மூன்று பிள்ளைகளின் தந்தையான அவர் தெரிவித்தார். இவரை போன்ற பல தனியார் துறை ஊழியர்கள் ( ஏற்கனவே வருமான வரி செலுத்துபவர்கள்) புதிய வரி குறித்து ஏமாற்றம் வெளியிட்டனர்.

தனியார் துறையை சேர்ந்த பலர் தாங்கள் வரிகளை செலுத்தத் தயார் என குறிப்பிட்ட அதேவேளை வெளிப்படைத்தன்மையின்மை, அரசாங்கத்தின் பணவிரயம், பொறுப்பற்ற அரசியல் தீர்மானங்கள் போன்றவை இந்த வரிகள் அவசியமற்றவை என்ற உணர்வை ஏற்படுத்துகின்றன எனத் தெரிவித்தனர்.

ஊதிப்பெருப்பிக்கப்பட்டுள்ள அரச சேவை தொடர்பாகவும் தனியார் துறையினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அரசியல் ரீதியில் நியமிக்கப்பட்ட வினைத்திறன் அற்ற அரசசேவையை தொடர்ந்தும் காப்பாற்றுவதற்கு அரச சேவையை சேர்ந்தவர்கள் தங்கள் சக்தியை வீணடிக்கின்றனர். இது எப்படி நியாயமானவிடயமாகும் என வாகனங்கள் திருத்தும் நிலையத்தை சேர்ந்த சுனில் என்பவர் கேள்வி எழுப்பினார்.

எனது ஊழியர்கள் மோசமான கால நிலைக்கு மத்தியிலும் மேலதிக நேரம் வேலைபார்த்து சம்பாதிக்கின்றனர். காலையிலிருந்து நள்ளிரவு வரை வேலைபார்க்கின்றனர் எனக் குறிப்பிட்ட அவர், அரசியல் ரீதியில் நியமிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு வருமானம் வழங்குவதற்காக தனியார் துறையை சேர்ந்தவர்கள் மீது அரசாங்கம் எப்படி வரி சுமையை செலுத்த முடியும் எனக் கேள்வி எழுப்பினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.12.2022இல் வெளியிடப்பெற்றது.